பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 03 வெள்ளிக்கிழமை 17.06.2022 கதிர் 224

**இது ரகசியம் அல்ல!**

கொழும்பில்ஒருவெளிநாட்டு ராஜதந்திரியுடன் பேசிக்கொண்டிருந்தேன். அவர் திடீரெனக் கேட்டார் ஒரு கேள்வி. நான் மலைத்துப் போனேன். அக்கேள்விக்கு என்னிடம் பதில் இல்லை.

இலங்கையின் தேர்தல் முறைமைகள் குறித்து ☞2

# குருந்தூர்மலை விவகாரத்தில் பொலிஸின் விளக்கம் 23இல்!



## முல்லை நீதிவான் நேற்றுப் பணிப்பு

(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு, ஜூன் 17

நீதிமன்றக் கட்டளையை மீறி குருந்தூர்மலையில் விகாரைக் கட்டுமானப் பணி நடைபெறுவதாக முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் முறைப்பாடு செய்யப்பட்டமையை அடுத்து எதிர்வரும் 23ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகி விளக்கம் தருமாறு பொலிஸாருக்கு நீதிமன்றம் நேற்று உத்தரவு வழங்கியிருக்கின்றது. ☞2

## கோழைகளின் ஆட்சி என வீரவன்ஸ காட்டம் கோட்டா, ரணிலைப் போட்டுத் தாக்குகிறார்!



கொழும்பு, ஜூன் 17

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோருக்கு முதுகெலும்பில்லை எனவும், முதுகெலும்பில்லாத கோழைகள் ஆட்சி செய்ய முடியாது எனவும் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர், இவர்கள் அமெரிக்காவுக்குப் பயந்து, ரஷ்யாவிடம் இருந்து எரிபொருளைக் கொள்வனவு செய்வதை தாமதப்படுத்தி வருகின்றனர் எனவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

இவர்கள் எரிபொருள் ☞2

## 50 ஆயிரம் மெ. தொன் அரிசி இந்தியக் கடன் உதவியின் கீழ்

இந்தியக் கடன் உதவித் திட்டத்தின் கீழ் ஐம்பதாயிரம் மெட்ரிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்குத் தேவையான நிதியை இந்தியக் கடன் உதவித் திட்டத்தின் கீழ் அரச வர்த்தகக் கூட்டுத்தாபனத்திற்கு ஒதுக்குவது எனப் பிரதமர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

இதன் மூலம் எதிர்காலத்தில் ☞2

## முறைப்படி நாட்டின் அதிகாரத்தை கைப்பற்றுவார் என சஜித் சூளுரை

மக்களுக்கு துரோகம் இழைத்து, பிரதமர் பதவி அல்லது பிற பட்டம் பதவிகளுக்கு விலைபோகும் எச்சில் துப்பும் பழக்கம் எனக்கில்லை. முறைப்படி நாட்டின் அதிகாரத்தை கைப்பற்றுவேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சூளுரைத்தார்.

நேற்று கண்டி மாவட்டத்தில் உள்ள நவயாலதென்ன கடுகஸ்தோட்டை, சமுத்திராதேவி மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து கருத்துரைத்த அவர் –

இன்று அரசாங்கம் வக்குரோத்தடைந்து விட்டது. ☞2



## அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாடு தவிர்க்க முடியாதது

### இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவிப்பு

எதிர்வரும் நாள்களில் சந்தைகளில் அரிசி, பருப்பு, சீனி, உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம் ஆகியவற்றுக்குத் தட்டுப்பாடு ஏற்படக் கூடும் என அத்தியாவசிய உணவுப் பொருள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன் செத்தல் மிளகாய், கடலை மற்றும் நெத்தலி ஆகியவற்றுக்கும் தட்டப்பாடு ஏற்படக் கூடும் என அந்தச் சங்கம் கூறியுள்ளது. ☞2

## சீனாவின் உள்நாட்டுப் பிரச்சினைகளில் ஐ.நா. தலையிடக் கூடாது என இலங்கை உபதேசம்

சீனாவின் உள்நாட்டு பிரச்சினைகளில் ஐக்கிய நாடுகள் சபை தலையிடக்கூடாது என இலங்கை வலியுறுத்தியுள்ளது.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 50ஆவது கூட்டத் தொடரின் பொது அமர்வில் பேசிய இலங்கை பிரதிநிதிகள் இதனை வலியுறுத்தினர்.

ஐ.நா. பொதுச் சபை 60/251 மற்றும் 48/141 தீர்மானங்களின் அடிப்படையில் மனித உரிமைகள் பேரவை மற்றும் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் பணிகள் பக்கச்சார்பற்றதன்மை, ஆக்கபூர்வமான சர்வதேச உரையாடல் மற்றும் ஒத்துழைப்பு ஆகிய கோட்பாடுகளால் வழிநடத்தப்பட வேண்டும் ☞4

## பதுளை தோட்டத்தில் நேற்று மின்னல் தாக்கி மூவர் காயம்!

### 12 குடியிருப்புகள் பகுதியளவில் சேதம்



நேற்று மாலை 5 மணிஅளவில் பதுளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தெல்பெத்தை கெந்தகொள தோட்டத்தில் மின்னல் தாக்கத்திற்கு இலக்காகி 3 பேர் காயமடைந்தனர். அவர்கள் ☞2

## பொதுமுடக்கமோ ஊரடங்கோ இல்லை! பாடசாலை வகுப்புகள் ஒன்லைன் மூலம்?

கடுமையான எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக நாடு முழுவதுமாக பொது முடக்கத்துக்கோ ஊரடங்குச் சட்டத்திற்கோ செல்ல வேண்டிய அவசியமில்லை என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நேற்றுத் தெரிவித்துள்ளனர்.

சில அமைச்சர்களும் அதிகாரிகளும் பொது முடக்கம் அல்லது ஊரடங்கு உத்தரவு தேவையா என ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் விசாரித்தனர் எனக் கூறப்படுகின்றது. இரு தலைவர்களும் எதிர்மறையாகப் பதிலளித்தனர் எனத் தெரிகிறது.

இருப்பினும், திங்கள்கிழமை தொடங்கி இரண்டு வாரங்களுக்கு பாடசாலைகள் மற்றும் பொது சேவைகளுக்கான ஒன்லைன் முறையை அறிமுகப்படுத்த அர சாங்கம் பரிசீலித்து வருகிறது. எவ்வாறாயினும், இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என வட்டாரங்கள் தெரிவித்தன.

## கடைசி எரிபொருள் கப்பல் இந்தியாவிலிருந்து வந்தது

### மேலும் கடன் பெற திரும்பவும் பேச்சு

இந்தியாவின் பிந்திய கடன் திட்டத்தின் கீழ் கிடைக்கின்ற இறுதி டீஸல் கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

40 ஆயிரம் மெட்ரிக்தொன் டீஸலுடன் இந்தக் கப்பல் வந்தடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேசமயம் இந்தியாவிடமிருந்து மேலும் ஐம்பது கோடி டொலர் கடன் மூலம் எரிபொருள் பெற்றுக்கொள்வது தொடர்பில் பேச்சுவார்த்தைகள் தற்போது ☞2

காலைக்கதிர்
Kalaikkathir



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஆராய்ந்து பரிந்துரைப்பதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. அங்கு இடம்பெற்ற வாதப்பிரதிவாதங்கள் தொடர்பில் என்னிடம் தகவல் அறிந்து கொண்டார் அவர். அச்சமயம் எது, எப்படி என்றாலும் நான்கு,ஐந்து வருடங்களாக மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்படாமை தவறு எனப் பெரும் விசனத்துடன் நான் கூறினேன்.

"அழுத பிள்ளைதான் பால் குடிக்கும். தட்டினால்தான் திறக்கப்படும்." – என்றார் அவர். எனக்கு விளங்கவில்லை. நான் விளங்காமல் முளுசுகின்றமையைப் பார்த்து அவர் பட்டவர்த்தனமாக கேட்டார்.

"உங்களில் – குறிப்பாகத் தமிழர்களில் – எத்தனை தலைவர்கள் மாகாணசபைத் தேர்தலை நடத்தச் சொல்லி வலியுறுத்தினார்கள்? இது உங்களின் அடிப்படை ஜனநாயக உரிமை. அது மறுக்கப்பட்டமைக்கு எதிராக உங்களிடமிருந்து பெரும் கிளர்ச்சி அல்லவா வெளிப்பட்டு இருக்க வேண்டும்? குறைந்தபட்சம் அந்தத் தேர்தலை நடத்தும்படி ஓர் இயக்கத்தையாவது பெருமெடுப்பில் நீங்கள் ஆரம்பித்துத் தொடர்ந்து இருக்க வேண்டாமா? எத்தனை தமிழ்க் கட்சிகள் இதனை ஒரு சர்ச்சையாக மாற்றி, மக்களைக் கொதிநிலையில் வைத்துப் போராடி இருக்கின்றன? கட்சிகளை விடுங்கள். உங்களைப் போன்ற பத்திரிகைகள் இதனை ஒரு பெரிய பூதாகர விவகாரமாக மாற்றி, தொடர்ந்து செய்திகளை வெளியிட்டு, மக்கள் மத்தியில் ஒரு கருத்தியல் நிலைப்பாட்டை ஏற்படுத்தியிருக்க வேண்டாமா? அங்கொன்றும் இங்கொன்றுமாக பெயருக்கு ஓரிரு செய்திகளை அல்லது ஓரிரு ஆசிரியர் தலையங்கங்களை எழுதி வெளியிட்டு இருப்பீர்கள். அதுவும் மாகாண சபைத் தேர்தல் நடத்தாமல் போனமைக்கு ஓரிரு கட்சிகளைக் குற்றம் சுமத்தி, ஓரிரு கட்டுரைகளை எழுதி இருப்பீர்கள். இது அவ்வளவு சிறிய விடயமா? ஒரு பெரிய அரசியல் விவகாரம் அல்லவா? தமிழர்களுக்கு மிக முக்கியமான விடயம் அல்லவா? உங்கள் கருத்தியலை பூதாகரமாக்கி, ஒரு கொதி நிலையில் விவகாரத்தை வைத்திருக்காமல் இருக்கும்போது உங்களுக்கு உதவும் விதத்தில் வெளிநாட்டு ராஜதந்திரிகளான நாங்கள் என்ன செய்ய முடியும்? மாகாணசபைத் தேர்தல் உங்கள் உரிமை. அதை வலியுறுத்தி உங்கள் குரல் பலமாக ஒலித்தால் அதற்கு ஆதாரமாக – ஆதரவாக – நாங்கள் ஏதேனும் செய்யலாம். நீங்கள் உங்கள் ஜனநாயக உரிமை மறுக்கப்படுகிறமையை அமைதியாகப் பார்த்துக் கொண்டு வாளாவிருந்தால் நாங்கள் என்ன செய்ய முடியும்?" – என்ற சாரப்படக் கேட்டார் அவர். என்னிடம் பதில் இல்லை. அவர் சுட்டிக் காட்டிய விடயமும் உண்மைதான்.

பின்னர் முன்னணியில் இருக்கும் மலையகத் தமிழ் தலைவர் ஒருவரிடமும், வடக்கு தமிழ் தலைவர்களுள் ஒருவரிடமும் இதனைக் குறிப்பிட்டேன். அந்த ராஜதந்திரி கூறியமை முற்றிலும் உண்மை என்றனர் இருவரும்.

"நாங்களும் (தமிழ் அரசியல்வாதிகளும்) நீங்களும், (தமிழ் ஊடகத் துறையினரும்) இதில் பெரும் தவறிழைத்து விட்டோம். மாகாணசபைத் தேர்தல் நடத் தாமையை ஒரு கொதிநிலை விவகாரமாக்காமல் வைத்துக்கொண்டிருந்தால் எப்படித் தேர்தல் நடைபெற வாய்ப்பு ஏற்படும்? அவ்வப்போது அறிக்கை விடும் அரசியல் கலாச்சாரத்தில் இருந்து வெளியே வந்து, இதனை ஒரு விவகாரமாக்க, இனி யாவது சிறுபான்மை மக்களின் கட்சிகள் எல்லாம் ஒன்றுபட்டுத் தீர்மானம் எடுத்துச் செயல்பட முன்வர வேண்டும்" – என்றார் அவர். அப்படி நடந்தால் சந்தோசம். நடக்குமா? நம்பிக்கை இல்லை.

★ ★ ★

தம்மிக பெரேரா எம்.பியாகின்றமையை ஆட்சேபித்து இதுவரை நான்கு அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் உயர்நீதிமன்றத்தில் போடப்பட்டிருக்கின்றன. அவற்றில் ஒன்று நிச்சயம் திங்களன்று உயர்நீதிமன்றத்துக்கு பரிசீலனைக்கு வருகின்றது. அதேசமயம் தம்மிக பெரேராவின் பெயரை எம்.பியாக ஏற்று வர்த்தமானியில் வெளியிட்ட தேர்தல் ஆணைக்குழுவுக்கு எதிராக ரிட் மனு ஒன்று தனியாக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதுவும் சில சமயங்களில் திங்களன்று உயர்நீதிமன்றத்தின் முன் பரிசீலனைக்கு எடுக்கப்படலாம்.

இனி, வரும் செவ்வாய்க்கிழமைதான் நாடாளுமன்றம் கூடும். அச்சமயத்தில் தான் தம்மிக பெரேரா எம்பியாகச் சத்தியப்பிரமாணம் செய்ய முடியும். அதற்கிடையில் திங்களன்று உயர்நீதிமன்றத்தில் அவரது எம்.பி. நியமனம் தொடர்பாக தொடுக்கப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவின் பேரிலோ அல்லது ரிட் மனுவின் பேரிலோ அவர் எம்.பியாகச் சத்தியப்பிரமாணம் செய்வதற்கு எதிராக இடைக்காலத் தடை வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்பதுதான் இப்போதைய நிலைமை.

பார்ப்போம் திங்களன்று என்ன நடைபெறுகிறது என்பதை.

– மின்னல் –

## முறைப்படி நாட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஆனால் எதிர்க்கட்சி வங்குரோத்து நிலைக்குச் சென்றுவிடவில்லை.

அவ்வாறு வங்குரோத்தடைந்திருந்தால் ஐக்கிய மக்கள் சக்தி நாட்டிற்காக மூச்சுத் திட்டம், இந்நாட்டின் எதிர்கால சந்ததியினருக்கான பிரபஞ்சம் வேலைத் திட்டம், பேருந்து நன்கொடை திட்டம் போன்ற சமூக நல திட்டங்களை செயல்படுத்த முடியாது.

இந்நாட்டில் கல்வி முறை முழுமையாக மாற்றியமைக்கப்பட வேண்டும். குறிப்பாக ஆங்கில மொழி, தகவல் தொழில்நுட்பம், விஞ்ஞானம், கணிதம் மற்றும் பொறியியல் போன்ற பாடப்பரப்புகள் முறையாகவும், வினைதிறனாகவும் உருவாக்கப்பட வேண்டும். – எனக் குறிப்பிட்டார்.

## குருந்தூர்மலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

குருந்தூர்மரை தொடர்பில் ஏற்கனவே முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கை ஒட்டி குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகத்தினர் மற்றும் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஆகியோர் நேற்றைய தினம் நகர்த்தல் பத்திரம் ஒன்றைச் சமர்ப்பித்து விடயத்தை நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். அதையடுத்தே இந்த உத்தரவு நேற்று வழங்கப்பட்டிருக்கின்றது.

முன்னதாக, தமிழர்களின் பூர்வீக வழிபாட்டிடமான முல்லைத்தீவு – தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையில் கடந்த 12 ஆம் திகதி ஞாயிறன்று, 'கபோக்' கல்லினாலான புத்தர் சிலை ஒன்றை அமைப்பதற்கும், அங்கு நீதிமன்றக் கட்டளையை மீறி அமைக்கப்பட்ட விகாரையில் விசேட பௌத்த வழிபாடுகளை மேற்கொள்வதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்பகுதி தமிழ் மக்கள் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டமையைத் தொடர்ந்து அந்த முயற்சிகள் அப்போது கைவிடப்பட்டிருந்தன.

இந்தப் பின்புலத்தில் நேற்று நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

ஏற்கனவே நீதிமன்றம் வழங்கிய தடைக் கட்டளையை மதிக்காமல் நீதிமன்றை அவமதிப்புச் செய்து, அங்கு அமைக்கப்பட்ட விகாரை தொடர்பிலும், பொலிஸார் தொடர்ச்சியாக இந்த வழக்கிலே நீதிமன்றிற்கு வழங்கவேண்டிய அறிக்கைகளை வழங்காது, சட்டத்தை மீறிச் செயற்படுபவர்களுக்கு சார்பாகச் செயற்பட்டமையையும் முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்டத்தரணிகள் அனைவரும் இணைந்து மன்றில் நீதிவானின் கவனத்திற்குக் கொண்டுவந்தனர்.

குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகம் மற்றும் பொலிஸார் தரப்புகளினால் நேற்று முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை அவதானித்த நீதிவான், வழக்குத் தொடுனரான பொலிஸார், குருந்தூர்மலையில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பில் விளக்கமளிப்பதற்காக எதிர்வரும் 23ஆம் திகதிக்கு இந்த வழக்கு விசாணையை திகதியிட்டார்.

இது தொடர்பில் குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகம் சார்பாக நீதிமன்றில் முன்னிலையான சட்டத்தரணிகளில் ஒருவரான எஸ்.தனஞ்சயன் பின்னர் கருத்துத் தெரிவிக்கையில் –

இந்தவழக்கில் ஏற்கனவே 13.09.2018 அன்று முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தால், மிகத் தெளிவான கட்டளை ஒன்று வழங்கப்பட்டிருந்தது. அக்கட்டளையிலே, குருந்தூர்மலைப் பிரதேசம் தொல்லியல் திணைக்களத்தின் கீழ் வருகின்ற பிரதேசம் எனவும், அப்பிரதேசத்திலே புதிதாக எவ்விதமான கட்டடங்களையும் அமைக்க முடியாது எனவும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

மேலும் பரம்பரையாக வழிபாடு செய்கின்ற சைவர்கள் அங்கு வழிபாடுகளை மேற்கொள்ள முடியும் எனவும், அதனை யாராலும் தடுக்க முடியாது எனவும், அத்தோடு ஏனைய புதிய கட்டடங்களை அமைக்கும், விகாரைகளை அமைக்கும் முயற்சிகளில் ஈடுபடுபவர்களைக் கைது செய்யலாம் எனவும் கட்டளை வழங்கப்பட்டிருந்தது.

அந்தக் கட்டளையை மீறியே தற்போது அங்கு புதிதாக ஒரு விகாரை அமைக்கப்பட்டு, அந்த விகாரையில் 12ஆம் திகதி விசேட பூசை வழிபாடுகளும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. இச்செயற்பாடுகளுக்கு எதிராக ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தைச் சார்ந்தவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமையால் அந்ந நிகழ்வுகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

அந்தவகையில் ஏற்கனவே முல்லைத்தீவு நீதிமன்றம் வழங்கிய கட்டளையினை மதிக்காமல் அவமதிப்புச் செய்து, அங்கு அமைக்கப்பட்ட விகாரை தொடர்பிலும், பொலிஸார் தொடர்ச்சியாக இந்த வழக்கிலே வழங்கவேண்டிய அறிக்கைகளை வழங்காது, சட்டத்தை மீறிச் செயற்படுபவர்களுக்கு சார்பாகச் செயற்பட்டமையையும் நீதிவானின் கவனத்திற்குக் கொண்ட. வந்திருந்தோம்.

இருதரப்பு வாதங்களையும் ஆழ்ந்து அவதானித்த நீதிவான், வழங்குத் தொடுநர் தரப்பான பொலிஸார் இந்த வழக்குத் தொடர்பாக தங்களுடைய நிலைப்பாடு என்ன என்பதை நீதிமன்றிலே கூறுவதற்காக, இந்த வழக்கு விசாரணைகளை இந்தமாதம் 23ஆம் திகதிக்கு திகதியிட்டுள்ளார்.

அதன்பின்னர் இந்த விடயங்கள் தொடர்பாக முல்லைத்தீவு நீதிவான் கட்டளை வழங்குவார். – என்றார்.

## பதுளை தோட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இந்த மின்னல் தாக்கத்தில் 12 குடியிருப்புகளுக்குப் பகுதி அளவில் சேதம் ஏற்பட்டுள்ளது.

கடும் மழை பெய்த போது மின்னல் தாக்கியுள்ளது. குடியிருப்புகளில் மின் உபகரணங்களும் சேதமடைந்துள்ளன.

கடந்த மாதம் இவ்வாறான ஒரு மின்னல் தாக்குதல் காரணமாக தோட்டத்தில் 20க்கும் மேற்பட்ட குடியிருப்புகளில் உள்ள மின் உபகரணங்கள், தொலைக்காட்சி, குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் வானொலிகள் சேதமாகி இருந்தன.

## அத்தியாவசியப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கடந்த மே மாதம் 6 ஆம் திகதி முதல் அத்தியாவசியப் பொருள் இறக்குமதியின் போது இதுவரை பயன்படுத்தப்பட்ட திறந்த கணக்கு அடிப்படையிலான முறையை நிறுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

அந்த முறைமை நிறுத்தப்பட்டதன் மூலம் அத்தியாவசிய பொருள் இறக்குமதியின் போது டொலர் பெற்றுக் கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக அத்தியாவசிய பொருள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

## 50 ஆயிரம் மெ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஏற்படக்கூடிய அரிசி தட்டுப்பாட்டைத் தவிர்க்கவும், அரிசி விலையில் அசாதாரணமான உயர்வைக் கட்டுப்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதமர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற இந்தியக் கடன் தொடர்பான கலந்துரையாடலில் வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ, நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா, முன்னாள் அமைச்சர் சாகல ரத்நாயக்க, பிரதமரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் அரச மற்றும் தனியார் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## கடைசி எரிபொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஆரம்பிக்கப்பட்டுள்ளன என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அத்துடன், மீண்டும் நாட்டுக்கு எரிபொருள் கிடைக்கும் திகதி தொடர்பில் தற்போது சரியாகக் குறிப்பிட முடியாதுள்ளதாகவும் அமைச்சர் காஞ்சன விஜேசேகர குறிப்பிட்டுள்ளார்.

## கோழைகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இல்லாமல் வீதியில் நொந்து போயிருக்கும் அப்பாவி மக்களை விட அமெரிக்காவைப் பற்றிச் சிந்திக்கின்றனர். அப்படியானால், அமெரிக்கா எரிபொருளை வழங்க வேண்டும்.

அமெரிக்கா அப்படி எரிபொருளை தராதபட்சத்தில், வழங்கும் இடத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும். இவர்களுக்கு முதுகெலும்பில்லை. பிரதமர் தனது பையில் நான்கு பில்லியன் டொலர்களை வைத்திருப்பது போல் காட்டியே பதவியை பெற்றுக்கொண்டார்.

தான் பதவியில் அமர்ந்த பின்னர், அமெரிக்கா, ஜப்பான், இந்தியா போன்ற நாடுகளிடம் இருந்து பணம் கிடைக்கும் எனக் கூறியே பதவியில் அமர்ந்தார். அப்படிதான் காட்டினார். பேச்சுவார்த்தை நடத்துகின்றார்.

வெறும் செய்திகள் மாத்திரமே வெளியாகின்றன. 2024 ஆம் ஆண்டே பிரச்சினைக்குத் தீர்வு என்று கூறுவது சரியாக வராது. பொறுப்பை ஏற்றுக்கொண்டால், அதனை துரிதமாக செய்து காட்ட வேண்டும்.

ஆனால் செய்வது போல் தெரியவில்லை. அப்படினால், எப்படி 2024 ஆம் ஆண்டு செய்ய முடியும்? – எனவும் விமல் வீரவன்ஸ கேள்வி எழுப்பியுள்ளார்.



# குருந்தூர் மலை பௌத்த மயமாக்கல் விவகாரம் காலிமுகத்திடலில் எதிரொலிக்காதமை ஏனோ?

## ரெலோ உறுப்பினர் சுரேந்திரன் கேள்வி

காலிமுகத்திடலில் முன்னெடுக்கப்படுகின்ற போராட்டத்தை நாங்கள் எதிர்க்கவில்லை. அவர்களுடைய நியாயப்பாட்டினை நாங்கள் நன்றாக புரிந்து கொள்ளுகிறோம்.

ஆனால் தமிழர் பிரச்சினையை பெரும்பான்மை இனத்தினருக்கு தெளிவுபடுத்துகிறோம், விளக்குகிறோம், அவர்களோடு கலந்துரையாடுகிறோம் என்றெல்லாம் கூறியவர்கள் குருந்தூர் மலை விவகாரத்தில் எங்கு சென்றார்கள்?

– இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார் ரெலோ உறுப்பினர் சுரேந்திரன்.

இது தொடர்பில் அவரது ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு –

குருந்தூர் மலை விவகாரம் மதப் பிரச்சினைக்கு அப்பாற்பட்டது. பௌத்த மதத்தின் பெயரால் தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளை அபகரித்து, அங்கு சிங்கள குடியேற்றங்களை நிறுவுவதும் அதனூடாக எங்கள் குடிப்பரம்பலை சிதைப்பதற்கும் முயல்வது இனவழிப்பு நடவடிக்கையாகவே கருதப்பட வேண்டும். இந்த நடவடிக்கைக்கு எதிராக காலிமுகத்திடலில் இருக்கும் போராளிகள் ஏன் குரல் கொடுக்கவில்லை என்ற கேள்வி எழுகிறது.

அதையும் தாண்டி தமிழர் பிரச்சினையை பெரும்பான்மை இனத்தினருக்கு தெளிவுபடுத்துகிறோம், விளக்குகிறோம், அவர்களோடு கலந்துரையாடுகிறோம் என்றெல்லாம் கூறியவர்கள் குருந்தூர் மலை விவகாரத்தில் தாங்கள் இணைந்து போராடிய பெரும்பான்மையின சகோதரர்களிடம் குருந்தூர் மலையில் பௌத்த சின்னங்களை நிறுவ முயல்வதற்கு எதிராக குரல் கொடுக்கக் கோரவில்லையா?

காலிமுகத்திடல் போராட்டத்தில் தமிழர்கள் இணைய வேண்டும் என்று மூர்க்கமாக குரல் கொடுத்தவர்கள் சிலர் குருந்தூர் மலை விவகாரத்தில் கள்ள மௌனம் காப்பது ஏன்?

கைதட்டல் கிடைக்காது என்பதற்காகவா அல்லது காலிமுகத்திடலில் போராடும் பெரும்பான்மை இனத்தின் மனம் நோகக்கூடாது என்பதா? எதற்காக மௌனம் காக்கிறார்கள்?

தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினையைப் புரிந்து கொள்ளாத – எமது அடிப்படை கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளாத – அல்லது அங்கீகரிக்காத இந்தப் போராட்டத்தில் தமிழ் மக்களும் இணைந்து கொள்ள வேண்டும் அல்லது தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக நாங்கள் இணைந்து கொண்டு இருக்கிறோம் என்று கூறுபவர்கள் யதார்த்த நிலையைப் புரிந்து கொள்ள வேண்டும். மக்கள் கூடுகின்ற இடங்களில் எல்லாம் சென்று சத்தமெழுப்புவதன் மூலம் தமிழ் மக்களுடைய பிரச்சினையைத் தீர்த்து விடலாம் என்று தமிழ் மக்களை நம்ப வைக்க முயல்வது கேலிக் கூத்தாகும். அது இன்று நிரூபணமாகியுள்ளது.



ஆகவே தென்னிலங்கையில் நடக்கின்ற அரசியல் அதிகார சதுரங்க ஆட்டத்தில் தமிழ் மக்களைப் பகடைக் காயாக பயன்படுத்த இடமளித்து நேரத்தை வீணடிப்பதை தவிர்க்க வேண்டும். கடந்த கால அனுபவங்களில் இருந்து, நல்லாட்சி காலம் உட்பட நாம் பாடம் கற்றுள்ளோம். இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தமிழர் தரப்பாக பேரம் பேசுவதே தேவையானது.

தமிழ் மக்களுக்கு பயன்தரும் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுப்பது பற்றியே நமது தரப்புக்கள் சிந்திக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறோம். – என்றுள்ளது.

# வலி.வடக்கு மக்கள் இடம்பெயர்ந்து 32 ஆவது ஆண்டு நிறைவு வழிபாடு!

## தெல்லிப்பழை துர்க்கையில் சிறப்புற நடந்தது



(இ.கலையமுதன்)

வலிகாமம் வடக்கு மக்களின் இடப்பெயர்வின் 32 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் புதன்கிழமை காலை 11 மணிக்கு சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன.

வலிவடக்கு பகுதிகள் முழுவதும் விடுவிக்கக்கோரி வழிபாடுகள் இடம்பெற்றதுடன் வழிபாட்டின் நிறைவில் சிதறுதேங்காய் அடிக்கப்பட்டது.

இந்த வழிபாடுகளில் வலி. வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கத்தின் தலைவர் அ.குணபாலசிங்கம், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா உட்பட பொது மக்கள் கலந்துகொண்டனர்.

1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம் திகதி வலிகாமம் வடக்கிலிருந்து அங்கிருந்த பொதுமக்கள் வெளியேற்றப்பட்டதன் 32 வருடங்கள் நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# விவசாயத்தைப் பாதுகாக்க அரசாங்கம் தவறுகின்றமை ஒட்டுமொத்த மக்களையும் அபாயத்துக்குள் தள்ளிவிடும்

## தவிசாளர் நிரோஷ் தெரிவிப்பு

அரசாங்கம் உடனடியாக விவசாயிகளுக்கு எரிபொருள் விநியோகத்தை சீர் செய்வதுடன் விவசாயத்தைப் பாதுகாப்பதற்கு முட்டாள் தீர்மானங்களை விடுத்து சிறந்த தீர்மானங்களை எடுக்க வேண்டும் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத்தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

அச்சுவேலி பிரதேச கமக்காரர்கள் விவசாயத்துக்கான எரிபொருள் தேவையை வலியுறுத்தி புதன்கிழமை காலை அச்சுவேலி சந்தையில் கையெழுத்துப் போராட்டத்தை ஆரம்பித்தனர். அந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு ஊடகங்களுக்குக் கருத்துரைக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

நாடு மிகவும் நெருக்கடியான சூழ் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இன்றைய காலகட்டக்கணிப்பின் பிரகாரம் எதிர்வரும் வாரங்களில் உணவுப் பொருள்கள் கிடைக்குமோ என்ற அச்சத்தில் மக்கள் வாழ்கின்றனர். அரசாங்கம் உணவுப் பாதுகாப்பையும் அத்தியாவசிய உணவுப் பொருள்களை மக்களுக்கு நியாய விலையில் கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற பொறுப்பையும் நிறைவேற்றத் தவறியுள்ளது. அடிப்படையில் நாட்டின் உணவுப் பாதுகாப்பிற்கான கட்டமைப்பு சீர்குலைந்துள்ளது.

இந்தத் துர்ப்பாக்கிய நிலைமைக்கு உரக்கொள்கை போன்ற விடயங்களில் அரசாங்கம் பின்பற்றிய தவறான நடவடிக்கைகள் பிரதான காரணமாகும். நாம் இயற்கை வழி உரப்பாவனையுடன் கூடிய விவசாய முயற்சிகளை நாம் வரவேற்கும் அதேவேளை, குறுங்காலத்தில் இயற்கை உரப்பாவனையை அடிப்படையாகக் கொண்ட விவசாயத்தை நாட்டில் வெற்றியடையச் செய்ய முடியுமா என படித்தவர்களிடமும் ஆய்வாளர்களிடமும் ஜனாதிபதி ஆலோசனை கேட்டிருக்க வேண்டும். விவசாயிகளுடன் கலந்துரையாடியிருக்கவேண்டும்.

இன்று எமது நிலங்களில் நாம் விவசாயத்தை முன்னெடுப்பதற்கு உரிய தடைகள் இன்றி எரிபொருளை விநியோகிக்கக் கோருகின்றோம். காரணம் விவசாயிகள் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் அவர்களது தொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கான குறைந்த பட்ச எரிபொருள் விநியோகத்தை ஏதும் பெற முடியாது திண்டாடுகின்றனர் என்பதை வெளிப்படுத்துவதற்காகவே திரண்டுள்ளோம்.

விவசாயிகள் தொழில் முயற்சிகளை மேற்கொள்ள முடியாத சூழல், விவசாய உற்பத்தியாளர்களை மாத்திரம் பாதிக்கும் தொழில்சார் பிரச்சினை கிடையாது. மாறாக அத்தனை மக்களது வயிற்றுப் பசியைப் போக்குவது சார்ந்த பிரச்சினையாகும். அரசாங்கம் தாமதமின்றி இந்த விடயத்தில் பொறுப்புச் சொல்ல வேண்டும்.

# வெள்ளிக்கிழமைகளில் விடுமுறை நீதிமன்றங்களுக்கு வேண்டாம்!

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் பிரதம நீதியரசருக்குக் கடிதம்

அரசாங்க ஊழியர்களுக்கு வெள்ளிக்கிழமை விடுமுறை வழங்கும் யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ள நிலையில், நீதிமன்ற செயற்பாடுகளைத்தடை இன்றி முன்னெடுத்துச் செல்ல, நீதிமன்றங்கள் வெள்ளிக்கிழமைகளில் இயங்கும் நிலைமையை அறிவிக்குமாறு பிரதம நீதியரசர் ஜனாதிபதி சட்டத்தரணி ஜயந்த ஜயசூரியவிடம் கோரப்பட்டுள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் இதற்கான கோரிக்கையைக் கடிதம் ஊடாக பிரதம நீதியரசருக்கு அறிவித்துள்ள நிலையில், வெள்ளிக்கிழமை விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், நீதிமன்றம் அந்த நாள்களில் இயங்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

பொது விடுமுறை தொடர்பில் முடிவெடுக்கும் சட்ட ரீதியிலான அதிகாரம் தொடர்பிலும் சுட்டிக்காட்டியுள்ள சட்டத்தரணிகள் சங்கம், நீதிமன்றம் இயங்குவது தொடர்பில் நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டும் எனக் கோரியுள்ளதாக அறிய முடிகிறது.

எவ்வாறாயினும் வெள்ளிக்கிழமை பொது விடுமுறைக்குள், குறித்த அறிவிப்பில் நீர் வழங்கல், மின்சாரம், சுகாதாரம், கல்வி, பாதுகாப்புப் பிரிவு உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகள் உள்ளடக்கப்படவில்லை.

அரசாங்க ஊழியர்களுக்கு வெள்ளிக்கிழமையில் விடுமுறை வழங்குவதற்கான யோசனை கடந்த 13 ஆம் திகதி அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டது.

தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடியை கருத்திற்கொண்டு அரசாங்க ஊழியர்களுக்கு வெள்ளிக்கிழமையில் விடுமுறை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**

**பாடசாலை அபிவிருத்திச்சங்க பொதுக்கூட்டம்**

கல்வி அமைச்சின் 2013/7 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைவாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 2018/2019 ஆம் ஆண்டிற்கான பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 03.07.2022 ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10.00 மணிக்கு கல்லூரியின் சபாலிங்கம் மண்டபத்தில் நடைபெறும். எமது கல்லூரியின் அனைத்துப் பெற்றோர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

நன்றி

**அதிபர்,**
**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.**

காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# பகுதி மறதி நோய்

'தனக்கு, தனக்கு என்றால் சுளகு படக்குப் படக்கு என்று அடிக்குமாம்' என்பார்கள்.

சில பிரமுகர்கள், மதத் தலைவர்களின் இப்போதைய அதீத துள்ளல்களைப் பார்க்கும் போது இந்தப் பழமொழி தான் நினைவுக்கு வருகின்றது.

"நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாத ஆட்சியாளர்கள் பதவிகளில் நீடிக்காது விலகி விட வேண்டும்.

"இலங்கையை ஆசியாவின் ஆச்சரியம் என்றனர். இன்று யாசகம் பெறும் நிலையில் உள்ளோம். சுபீட்சத்தின் நோக்கு என்றார்கள். இன்று சுபீட்சம் எங்கே?

"மக்களுக்கு சேவையாற்றவே அதிகாரம் வழங்கப்படுகின்றது. இந்த அதிகாரத்தை மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தக் கூடாது. மக்களுக்குச் சேவையாற்ற முடியாவிட்டால், விலகி விடுவதே சிறந்தது.

"மே 09 ஆம் திகதிச் சம்பவத்தை அனுமதிக்க மாட்டோம். கொலைகள் மற்றும் வன்முறைகளைக் கண்டிக்கிறோம். அந்த வன்முறைகள் எங்கிருந்து ஆரம்பமாயின என்பது குறித்தும் சிந்திக்க வேண்டும்." – என்று சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்திருக்கின்றார் கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்.

அரசியல்வாதிகளுக்கு ஒரு நிரந்தர வருத்தம் உண்டு. அது கடந்த கால நடப்புகளில் தங்களுக்குச் சாதகமானவை மட்டும்தான் அவர்களுக்கு நினைப்பில் இருக்கும். ஏனையவை மறந்து விடும்.

அரசியல்வாதிகளின் இந்தப் பகுதி விடயங்கள் மறந்து விடும் நோய், பேராயருக்கும் வந்து விட்டது போலும். ஏனெனில் இப்போது மதத் தலைவர் என்ற நிலையிலிருந்து கீழிறங்கி அவரும் பெரும்பாலும் அரசியல்தானே செய்கின்றார்...!

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் இவரின் ஆசீர்வாதத்துடன்தான் இன்று நாட்டைக் குழப்பும் கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரத்துக்கு வந்தார் என்பதும், அது, அரசியல்வாதிகள், இவர் போன்ற மதத் தலைவர்களுக்கு இருக்கும் பகுதி மறதி நோயின் அடிப்படையில் அவர்களுக்கு மறந்து போய் விட்டாலும், நாடும் மக்களும் மறந்து விட முடியாதது என்பதும் உண்மை.

வன்முறையின் ஆரம்பம் எங்கு என்பது குறித்து ஆராய வேண்டும் என்று இப்போது தத்துவம் பிளக்கின்றார் அவர். ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குதலின் முழு உண்மைகளும், கண்டறியப்பட வேண்டும் என்று துடியாய்த் துடிகின்றார். ஆனால் அதற்கு முந்தியவற்றை எல்லாம் அவர் மறந்து விட்டாரா – தனது பகுதி மறதி நோயினால் – என்ற கேள்வி எழுகின்றது.

முள்ளிவாய்க்கால் பேரழிவு வரை தமிழினம் அழிந்த போது – ஈஸ்டர் ஞாயிறுக் கொடூரத்தில் கொல்லப்பட்ட, படுகாயமடைந்த மக்களைப் போல பல டசின் மடங்கு அப்பாவித் தமிழர்கள் கொன்றொழிக்கப்பட்ட போது – அதற்கு எதிராக மூச்சே விடாத, அதே நேரம் 'இயேசுவின் வழியில் வந்த' வழிகாட்டி எனத் தம்மைக் கருதிக் கொள்பவர்தான் அவர். தமிழர் தேசத்துக்கு எதிராக அந்தக் கொடூரங்களை இழைத்த தரப்புகளுக்கு ஆசீர்வாதம் வழங்கி, பேரழிவு நடத்தும் களங்களுக்கு – தமிழர் தாயகத்துக்கு – அனுப்பி வைத்த வெள்ளை உடை மதபோதகர் வரிசையைச் சேர்ந்தவர்தான் இவரும்.

மே 9 வன்முறையின் மூலத்தைத் தேட வேண்டும் என்று இப்போது அளக்கின்றார். அதன் மூலத்தை முப்பது, நாற்பது வருடங்களாகத் தமிழர் தேசத்தை அடக்கி, ஒடுக்கி, சீரழித்து, நாசமாக்க இடமளித்து, அதை ஆசீர்வதித்து, அங்கீகரித்த இத்தகையோரின் மனவமைப்பின் மூளை மையத்தில்தான் தேட வேண்டும்.

விதைத்தவர்கள் அறுக்க வேண்டியதாக உள்ளது. அவ்வளவுதான். அதற்காக விசனிக்க முன்னர், தமிழர் தேசத்துக்கு எதிராகக் கொடூரங்கள் மனிதப் பேரவலத்தை ஏற்படுத்தும் விதத்தில் இழைக்கப்பட்டபோது, மௌனமாக அதைப் பார்த்திருந்து, அதை அங்கீகரித்து, ஆசீர்வதித்த கொடூரக் குற்றத்துக்கான விளைவுதான் இன்றைய நிலைமை என்று தம்மை தாமே அவர் விசனிப்பது தான் பொருத்தமானதாக இருக்கும்.

# சுற்றுலாத்துறையின் மூலமாக 80 கோடி டொலர் வருமானம்

இந்த வருடத்தின் எஞ்சியுள்ள காலத்தில் சுற்றுலாத்துறையின் மூலம் 80 கோடி அமெரிக்க டொலர் வருமானத்தை பெறக் கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

சுற்றுலாத் துறைசார் முக்கியஸ்தர்களுடன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நடத்திய கலந்துரையாடலின் போதே அதிகாரசபை இதனைத் தெரிவித்துள்ளது.

பிரதமர் அலுவலகத்தில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன் போது பலாலி விமான நிலையத்தின் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு பிரதமர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

எதிர்வரும் 6 மாதங்களில் ஆகக்கூடுதலான இந்திய சுற்று லாப் பயணிகளை இலங்கைக்கு வர வழைக்கத் தேவையான நடவடிக்கை களை எடுக்குமாறும் பிரதமர் அறிவுறுத்தி யுள்ளார்.

சுற்றுலாப் பயணி களை கவர்ந்திழுப்பதற்கான திட்டங்களை அமுல்படுத்துவது அவசியமாகும். இந்தக் காலப்பகுதியில் கலாசாரநிகழ்வுகளை ஒழுங்குசெய்வதன் மூலம் உயர்ந்த பயன்களை அடைந்து கொள்ள முடியும் என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை தொடர்பாக சர்வதேச மட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது பற்றி இராஜதந்திர அடிப்படையில் பேச்சுகள் இடம்பெறுகின்றன என அங்கு கருத்து வெளியிட்ட அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

எதிர்வரும் காலப்பகுதியில் 8 லட்சம் சுற்றுலாப் பயணிகளை வரவழைப்பதன் மூலம் 80 கோடி அமெரிக்க டொலர்களை ஈட்டுவதற்கான வாய்ப்புக் கிடைக்குமென்று சுற்றுலாத்துறை அதிகாரிகள் இதன்போது தெரிவித்தார்கள்.

# மக்களின் கடும் எதிர்ப்புக்கு மத்தியிலும் மன்னாரில் கனியவள மணல் அகழ்வுகள்!

## அருட்பணி ஞானப்பிரகாசம் வேதனை



எம் நாட்டில் போர்க்காலங்களில் சத்தத்துடன் பாதிப்புக்கள் காணப்பட்டன. ஆனால் இப்பொழுது சத்தம் இல்லாத தன்மையில் பாதிப்புக்கள் இடம்பெற்று வருகின்றன.

மன்னாரில்கனியவளமணல்அகழ்வுக்கு மக்கள் எதிர்த்தும் அது மிகவும் நேர்த்தியாக இடம்பெற்று வருவது மக்கள் மத்தியில் கவலை உண்டு பண்ணி வருவதாக மன்னார் பிரஜைகள் குழுத் தலைவர் அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார் தெரிவித்தார்.

மன்னார் பிரஜைகள் குழுவின் மாதாந்த ஆளுநர் சபை கூட்டம் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதன் அலுவலகத்தில் இடம்பெற்றபோது அதன் தலைவர் அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார் இங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் –

நாம் இந்த சமகாலத்தை நோக்கும்போது மிகவும் பயங்கரம் நிறைந்த காலக்கட்டமாகக் காணப்படுகின்றது.

கடந்த போர் காலங்களைவிட இது மிகவும் மோசம் நிறைந்த காலமாக அமைந்துள்ளது.

தற்பொழுது எங்கும் பாதுகாப்பு அற்ற தன்மையாகக் காணப்படுகின்றது. வீடுகள், தெருக்கள், மத ஸ்தானங்கள், வைத்தியசாலைகள் போன்றவற்றிலும் தற்பொழுது பாதுகாப்பு அற்ற தன்மையே காணப்படுகின்றது.

போர்க்காலங்களில் சத்தத்துடன் பாதிப்புக்கள் காணப்பட்டன. ஆனால் இப்பொழுது சத்தம் இல்லாத தன்மையில் பாதிப்புக்கள் இடம்பெற்று வருகின்றன.

மன்னார் தீவு அழிந்து போகும் தன்மையில் கனியவள மணல் அகழ்வு இடம்பெற்ற ஆரம்ப காலம் முதல் மன்னார் மக்கள் இதற்கு எதிராகக் குரல் கொடுத்தமையுடன் தெருக்களில் இறங்கியும் இந்தச் செயல்பாட்டுக்கு எதிரான கவனவீர்ப்பு போராட்டங்களையும் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்துக்கும் கொண்டு வந்தனர்.

ஆனால் இன்று என்ன நடக்கின்றது என்றால் மன்னார் மக்களுக்குத் தெரியாமல் இந்த மணல் அகழ்வு இரவிலும் மின்சார தடையுள்ள நேரங்களிலும் மிகவும் நேர்த்தியாக இடம்பெற்று வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக எமது மாவட்ட தலைமைத்துவங்களும் அக்கறையின்றி இருந்து வருகின்றன என இந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்து வருகின்றனர்.

சமகாலத்தில் இந்த விடயம் மன்னார் மக்களுக்கு ஒரு சவாலாக இருந்து வருவதுடன் பொருளாதாரப் பிரச்சினையும் மறுபுறம் அரசியல் பிரச்சினைகளும் எம் மத்தியில் தாண்டவமாடி வருகின்றது.

இந்த நிலையில் எங்கும் சமுதாய சீரழிவும் அனைவரையும் தாக்கும் நிலையும் உருவாகி வருகின்றன. இந்த நிலையில் எம் நாட்டில் சரியான அரசியல் கட்டமைப்பும் ஏனைய கட்டமைப்புக்கள் அற்ற நிலை காணப்படுவதால் சமுதாயம் குறிப்பாக எதிர்கால சந்ததியினர் நாளாந்தம் பெரும் சீரழிவுக்கு தள்ளப்பட்டு வருகின்றமை அனைவர் மத்தியிலும் கவலையை உண்டுபண்ணி வருகின்றது எனத் தெரிவித்தார்.

---

## சீனாவின் உள்நாட்டுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என ஜெனீவாவில் உள்ள இலங்கை பிரதிநிதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

ஐ.நா. மற்றும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களின் முக்கியத்துவத்தை நாங்கள் மீண்டும் வலியுறுத்துகிறோம் என இலங்கை கூறியது.

சீன அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் உய்குர் தன்னாட்சி பிராந்தியம் உள்ளிட்ட பகுதிகளுக்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்செலெட் மேற்கொண்ட விஜயத்தை வரவேற்பதாக இலங்கை தெரிவித்துள்ளது.

சீன மற்றும் ஐ.நா. மனித உரிமை பேரவை அலுவலகத்துக்கு இடையிலான ஒத்துழைப்புக்களை நாங்கள் வரவேற்கிறோம் என இலங்கை பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

ஐ.நா. சாசனத்தின் பிரிவு 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள இறையாண்மை மற்றும் தலையிடாமைக்கு மதிப்பளிப்பது அவசியம் என இலங்கை குறிப்பிட்டது.

ஒரே சீனாக் கொள்கையை இலங்கை தொடர்ந்து கடைப்பிடித்து வருவதாகவும் இலங்கை பிரதிநிதிகள் மேலும் தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட நாட்டின் சம்மதம் மற்றும் ஒத்துழைப்போடு எடுக்கப்படும் முயற்சிகள், உண்மையான முன்னேற்றத்துக்கு பங்களிக்கும் என இலங்கை அரசாங்கம் கூறியது.

எமது தேசிய முன்னுரிமைகளுக்கு இணங்க, பரஸ்பர ஒத்துழைப்பு மற்றும் மரியாதை ஆகியவற்றின் அடிப்படையில் மனித உரிமைகள் பேரவை மற்றும் அதன் பொறிமுறைகளுடன் தொடர்ந்து இணைந்து செயற்படத் தயாராக இருப்பதாக இலங்கைப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

# இந்தியாவில் கொவிட் தடுப்பூசி செலுத்துகை எண்ணிக்கை 195 கோடியையும் தாண்டியது



இந்தியாவின் கொவிட் – 19 தடுப்பூசி மொத்த செலுத்துகை கடந்த செவ்வாய்க்கிழமை காலை 7 மணி வரை 195 கோடி 35 ஆயிரத்தைத் (1,95,35,70,360) தாண்டியுள்ளதாக மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அமைச்சகத்தின் கூற்றுப்படி, 'மார்ச் 16 ஆம் திகதி இயக்கம்' தொடங்கிய பின்னர், இதுவரை 12 – 14 வயதுக்குட்பட்ட 3.52 கோடிக்கும் அதிகமான (3,52, 45,234) இளம் பருவத்தினர் கொவிட் – 19 தடுப்பூசியின் முதல் டோஸைப் பெற்றுள்ளனர் என்று அரசாங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

18 – 59 வயதிற்குட்பட்டவர்களுக்கான கொவிட் – 19 பூஸ்டர் டோஸ்களின் பதிவு ஏப்ரல் 10, 2022 அன்று தொடங்கியது, மேலும் 34 லட்சத்து 69 ஆயிரத்து 795 முன்னெச்சரிக்கை டோஸ்கள் வழங்கப்பட்டுள்ளன என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தியா முழுவதும் கொவிட் – 19 தடுப்பூசியின் வேகத்தை விரைவுபடுத்துவதற்கும் விரிவாக்குவதற்கும் மத்திய அரசு உறுதிபூண்டுள்ளது. நாடு தழுவிய கொவிட் – 19 தடுப்பூசி ஜனவரி 16, 2021 அன்று தொடங்கியது.

அமைச்சகத்தின் கூற்றுப்படி, இந்தியாவில் தற்போது தொற்றுப் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை தற்போது 50,458 ஆக உள்ளது, இது மொத்த நேர்மறை வழக்குகளில் 0.12 சதவீதமாகும். மேலும் தொற்றிலிருந்து தேறுவோர் (மீட்பு) விகிதம் 98.67 சதவீதமாக உள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் 4,035 நோயாளிகள் குணமடைந்துள்ளனர் மற்றும் மீட்கப்பட்ட நோயாளிகளின் மொத்த எண்ணிக்கை (தொற்றுநோய் தொடங்கியதில் இருந்து) இப்போது 4 கோடி 26 லட்சத்து 61 ஆயிரத்து 370 ஆக உள்ளது என்று அரசாங்க தரவுகள் தெரிவிக்கின்றன.

கடந்த 24 மணி நேரத்தில் 6,594 புதிய தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர். நாட்டில் வாராந்திர நேர்மறை விகிதம் தற்போது 2.32 சதவீதமாக உள்ளது. மற்றும் தினசரி நேர்மறை விகிதம் 2.05 சதவீதமாக உள்ளது என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது என்று அமைச்சகத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

கடந்த 24 மணிநேரத்தில் மட்டும் மொத்தம் 3 லட்சத்து 21 ஆயிரத்து 873 கொவிட் – 19 சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. இந்தியா இதுவரை 85 கோடி 54 லட்சம் (85,54,30,752) ஒட்டு மொத்த சோதனைகளை நடத்தியுள்ளது.

**(மூலம்: ஏ.என்.ஐ.)**



# சர்வதேச தர வரிசையில் கொடி கட்டிப் பறக்கும் இந்தியப் பல்கலைகள்

நாற்பத்தொரு இந்தியப் பல்கலைக்கழகங்கள் – கடந்த ஆண்டு 35 இல் இருந்தன – QS உலக பல்கலைக்கழக தரவரிசை பற்றிய QS இல் 2023 இல் இடம்பெற்றுள்ளன. இந்த ஆண்டு இந்த அட்டவணையில் ஏழு இந்திய கல்வி நிறுவனங்கள் புதிதாக அறிமுகமாகின்றன.

பெங்களூரு இந்தியன் இன்ஸ்டிடியூட் ஒவ் சயின்ஸ் (உலக அளவில் 155வது இடம்) கடந்த ஆண்டிலிருந்து 31 இடங்கள் முன்னேறி இந்திய கல்வி நிறுவனங்களில் முதல் இடத்தைப் பிடித்துள்ளது. அதைத் தொடர்ந்து IIT பாம்பே மற்றும் IIT டெல்லி ஆகிய மூன்றும் முதல் 200 இடங்களில் உள்ளன.

பல்கலைக்கழகங்கள் உருவாக்கும் ஆராய்ச்சியின் தாக்கத்தை மதிப்பிடுவதற்கு உயர்கல்வி ஆய்வாளர் குவாக்கரெல்லி சைமண்ட்ஸ்(QS )பயன்படுத்தும் 'போதனைகளுக்கான மேற்கோள்கள்' குறிகாட்டியில் உலகளவில் பெங்களூரு இந்தியன் இன்ஸ்டிடியூட் ஒவ் சயின்ஸ் முதலிடத்தைப் பெற்றுள்ள நிலையில், இந்தியாவும் ஆராய்ச்சி துறையில் வலுவாக வெளிப்பட்டுள்ளது. மேற்படி குறிகாட்டியின்படி, பல்கலைக்கழகங்கள் ஆசிரிய அளவுக்கேற்ப மாற்றியமைக்கப்படும்போது, பெங்களூரு விஞ்ஞான நிறுவனம் உலகின் தலைசிறந்த ஆராய்ச்சிப் பல்கலைக்கழகமாகத் திகழ்கிறது. இந்த அளவீட்டுக்கு 100/100 என்ற சரியான மதிப்பெண்ணை அது பெற்றுள்ளது.

இந்தக் குறிகாட்டியின்படி IIT குவஹாத்தி 37 ஆவது இடத்தையும் IIT, ரூர்க்கி 47 ஆவது இடத்தையும் மற்றும் புதிதாக இப்பட்டியலுக்குள் வந்துள்ள மெட்ராஸ் பல்கலைக்கழகம் 48 ஆவது இடத்தையும் பெற்று உலகளாவிய 'டொப் – 50 ஆராய்ச்சி' நிறுவனங்களுக்குள் வந்துள்ளன.

"இந்தத் தரவரிசைப் பதிப்பு, பல இந்தியப் பல்கலைக்கழகங்கள் தங்கள் ஆராய்ச்சித் தடத்தை மேம்படுத்தச் செய்துவரும் சிறந்த பணியை பிரதிபலிக்கிறது. உலக அரங்கில் அவர்களின் நற்பெயருக்கு சாதகமான பெறுபேறுகளையும் அது தருகின்றது" என QS இன் மூத்த துணைத் தலைவர் பென் சௌட்டர் கூறினார்.

மாறாக, இந்திய உயர்கல்வித் துறையானது போதிய கற்பித்தல் திறனை வழங்குவதில் இன்னும் போராடுகிறது என்றும் எங்கள் தரவுத்தொகுப்பு தெரிவிக்கிறது. இந்தியா தொடர்ந்து புதிய உயரங்களை எட்ட வேண்டுமானால் – பல்கலைக்கழகங்களுக்குள்ளும் மற்றும் ஒட்டு மொத்தத் துறையிலும் – மேலும் விரிவுபடுத்துதல் அவசியமாகும்." – என்றும் அவர் கூறினார்.

QS ஆனது உலகளவில் 99,000 பணிகொள்வோர் மற்றும் பணியமர்த்தல் மேலாளர்களை மூலம் ஆய்வு செய்து தனது தர வரிசை மதிப்பீட்டை ஒழுங்கு செய்தது.

IIT பாம்பே மற்றும் IIT டெல்லி ஆகியவை உலகின் முதல் 100 இடங்களில் முறையே 59 ஆவது மற்றும் 72 ஆவது இடங்களைப் பெற்று, ஆண்டுக்கு ஆண்டு தங்கள் தரவரிசையை மேம்படுத்தும் இரண்டு தேசியப் பல்கலைக்கழகங்களாக உயர்ந்து வருகின்றன.

இந்த ஆண்டு QS உலகப் பல்கலைக்கழக தரவரிசையானது, கடந்த ஆண்டு 1,300 இல் இருந்து நூறு இடங்களில் 1,418 நிறுவனங்களைக் கொண்டு, இதுவரை இல்லாத அளவில் மிகப்பெரியளவில் மேற்கொள்ளப்பட்டது.

இந்தப் பட்டியில் –

Massachusetts Institute of Technology (MIT) தொடர்ந்து பதினொராவது ஆண்டாக உலகின் முதல் இடத்தில் உள்ளது. கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் இரண்டாம் இடத்துக்கும், ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகம் மூன்றாவது இடத்துக்கும் முன்னேறியுள்ளன.

**(மூலம்: த எக்கனொமிக்ஸ் ரைம்ஸ்)**



# விவசாயத்துறைமீது அதிக அவதானம் செலுத்தப்படவேண்டியது மிக அவசியம்!

## உணவு மற்றும் விவசாய அமைப்பின் இலங்கை பிரதிநிதி வலியுறுத்து

இப்போது நாம் மிகவும் பாரதூரமான நெருக்கடி நிலையில் இருக்கின்றோம். எனவே இதனை உரிய வாறு கையாள்வதற்கு நாட்டின் உற்பத்தி இயலுமையை மீளக்கட்டியெழுப்பக்கூடியவகையில் விவசாயத் துறையின்மீது அதிக அவதானம் செலுத்தப்பட வேண் டியது அவசியமாகும் என்று உணவு மற்றும் விவசாய அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி விமலேந்திர ரன் தெரிவித்துள்ளார்.

நாடு முகங்கொடுத்திருக்கும் உணவுப்பாதுகாப்பு நெருக்கடி தொடர்பாக அவர் மேலும் கூறியிருப்பவை வருமாறு –

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அதிக விலையைச்செலுத்தி உணவுப்பொருள்களைக் கொள்வனவு செய்யமுடியாதவர்கள், தமது உணவு நுகர்வைக் குறைத்துக்கொள்கின்றார்கள்.

இல்லாவிட்டால் மீன், மரக்கறி மற்றும் கீரைவகை உள்ளிட்ட போசணைகொண்ட பதார்த்தங்கள் குறைவான, அதிக கலோரியுடைய உணவை உட்கொள்கின்றார்கள். இது சிறுவர்கள், கர்ப்பிணிப்பெண்கள் மற்றும் பின்தங்கிய சமூகப்பிரிவினர்மீது பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. நாம் மிகவும் பாரதூரமான சூழ்நிலையில் இருக்கின்றோம். இப்போது நாட்டின் உற்பத்தி இயலுமையை மீளக்கட்டியெழுப்பக்கூடிய வகையில் விவசாயத் துறையின்மீது அதிக அவதானம் செலுத்தப்படவேண் டியது அவசியமாகும்.

இந்தப் பின்னணியில் நாம் கடந்த வாரம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்திருந்தோம். அதன்போது ஐக்கிய நாடுகள் சபையிடம் அவர் இருதரப்பு மற்றும் பல்தரப்பு உதவிகளைக் கோரியிருந்தார்.

அதன்படி 4 கோடியே 72 லட்சம் அமெரிக்க டொலர் நிதியுதவியைக் கோரும் வகையிலான செயற்திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதுடன், உணவுப்பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் சமூகப்பாதுகாப்பு ஆகிய மூன்று முக்கிய விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் அதற்கு அப்பால் விவசாயத்துறையைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

# தமிழ் புகலிடக் கோரிக்கையாளர் குடும்பத்தை சந்தித்த ஆஸி.பிரதமர்



இலங்கை தமிழ் புகலிடக் கோரிக்கையாளர் குடும்பத்தை ஆஸ்திரேலிய பிரதமர் அன்டனி அல்பெனிஸ் நேற்று (புதன் கிழமை) சந்தித்துள்ளார்.

குயின்ஸ்லாந்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர், கிளாட்ஸ்டோனில் நடேசலிங்கம் குடும்பத்தினை சந்தித்துள்ளார்.

நடேசலிங்கம் குடும்பத்தினர் பிரதமருக்கு நன்றி தெரிவித்தனர்.

அவர்களுக்கு நிரந்தர வதிவிடம் விரைவில் கிடைக்கும் என பிரதமர் உறுதியளித்தார் என தமிழ் குடும்பத்தின் நண்பரான அஞ்செலா பிரெட்ரிக்ஸ் தெரிவித்துள்ளார்.

மேலும் மகிழ்ச்சியான நாள்கள் வரவுள்ளன என்பதை அறிந்து இன்று நாங்கள் உண்மையாகவே நம்பிக்கையுடன் காணப்படுகின்றோம் என குறிப்பிட்டுள்ள அவர், பிரதமருடன் உரையாட எங்களுக்கு வாய்ப்பு கிடைக்குமா என்பது தெரியாத நிலையில் காணப்பட்டோம்.

ஆனால் பிரியாவும் நடேசும் தங்கள் நன்றியை தெரிவிப்பது மிகவும் அவசியமானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரதமரை அவர்கள் கட்டித்தழுவுவதை பார்ப்பது மிகவும் உணர்ச்சிவசப்படவைத்தது தீர்வு வந்துகொண்டிருக்கின்றது என பிரதமர் உறுதியளித்தார் எனவும் அஞ்செலா பிரெட்ரிக்ஸ் தெரிவித்துள்ளார்.

# சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு!

சுற்றுலாப் பயணிகளின் வருகை மீண்டும் அதிகரித்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது. நாளாந்தம் குறைந்தது 920 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகைதருகின்றனர் என சுற்றுலா அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் நாயகம் தம்மிக்க விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த சில மாதங்களாக நாட்டில் நிலவும் அமைதியற்ற சூழ்நிலை காரணமாக சுற்றுலாப் பயணிகளின் வருகை வெகுவாகக் குறைவடைந்துள்ளது. இந்தநிலையில் தற்போது இந்தியாவிலிருந்து அதிகமான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தருவார்கள் என சுற்றுலா அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் நாயகம் தம்மிக்க விஜேசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அத்துடன், சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் பல்வேறு ஊக்குவிப்பு வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# முதலாம் தரத்திற்கு மாணவர்களை சேர்ப்பதற்கான சுற்றறிக்கை புதுப்பிப்பு

(கல்லடி நிருபர்)

தரம் ஒன்றுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான திருத்தப்பட்ட புதிய சுற்றறிக்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவால் கடந்த திங்கட்கிழமை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தரம் ஒன்றுக்கு மாணவர்களைச் சேர்ப்பதற்காக இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையை அமுல்படுத்தும் போது ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் அதிபர்கள், சுற்றறிக்கை திருத்தக்குழு, அமைச்சின் விசாரணைப் பிரிவு, லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு, தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளிட்ட தரப்பினரால் முன்வைக்கப்பட்ட விடயங்களை கருத்திற்கொண்டு புதிய சுற்றறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இதன்படி, 2023 ஆம் ஆண்டு முதல் குறித்த சுற்றறிக்கை அமுலுக்கு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெற்றோல் இருந்தும் மின்சாரம் இன்மையால் 3 மணி நேரம் வரிசையில் நின்ற பொதுமக்கள்






வவுனியா – ஓமந்தை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் இருப்பிலிருந்தும் மின்சாரம் தடைப்பட்டமையால் மூன்று மணித்தியாலங்கள் தாமதத்தின் பின்னர் எரிபொருள் வழங்கப்பட்டது.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் (புதன்கிழமை) காலை அநேக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் ஓமந்தை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மாத்திரம் வழங்கப்பட்டு வந்தது. இதனால் பெற்றோலை பெற்றுக் கொள்வதற்காக நீண்ட வரிசையில் பொதுமக்கள் கூடிநின்றனர்.

எனினும் காலை 8.30 மணியளவில் மின்சாரம் தடைப்பட்டமையால் எரிபொருள் நிரப்பும் செயற்பாட்டில் தாமதம் ஏற்பட்டது.

இதனால் வரிசையில் நின்ற பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களைச் சந்தித்தனர். எனினும் காலை 11 மணியளவில் மின்சாரம் வந்ததும் மீண்டும் எரிபொருள் நிரப்பும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டது.

# கோழி பிடிக்குற வேலையா இருந்தாலும்...!

## அக்கரை இக்கறை அலசல்



என்.சத்தியமூர்த்தி

இனப்பிரச்சினையைத் தாண்டி, நாடு தழுவிய பொருளாதாரப் பிரச்சினை என்றான பிறகு, நாட்டில் இருந்து, கள்ளத்தோணி மூலம் வெளிநாடு, அதிலும் குறிப்பாக ஆஸ்திரேலியா செல்ல முயற்சி செய்பவர்களின் எண்ணிக்கை கூடிவிட்டது. இதுவரை தமிழர் மட்டும் என்றிருந்த இந்த வெளிநாட்டு ஆர்வம், சிங்களவர்களையும் பற்றிக் கொண்டது தவிர்க்க முடியாதது.

என்றாலும், இனப் பிரச்சினை என்ற குறுகிய வட்டத்தில் இருந்து நோக்கும்போது, நாட்டில் வாழும் தமிழ் இளைஞர்களின் எதிர்காலத்தை நினைத்துப் பார்க்கும்போது, பரிதாபமே மிஞ்சுகிறது. இதற்கு, தற்கால, கடந்த கால தமிழர் தலைமைகளும் பொறுப்பேற்க வேண்டும். இதற்கு, விடுதலைப் புலிகள் இயக்கமும் விதிவிலக்கல்ல. ஆனால், தற்போதைய அரசியல் - பொருளாதார சூழலில், வேறு மார்க்கமும் இல்லை என்பதே உண்மை. ஆனால், இனப்போர் முடிந்த இடைப்பட்ட 13



ஆண்டுகளில், தமிழ் இளைஞர்களின் வாழ்க்கை மற்றும் எதிர்காலத்தோடு தொடர்ந்து விளையாடி வந்தவர்களுக்கு, எந்த மன்னிப்பும் கிடையாது.

'சிங்களம் மட்டும்' என்ற நிலைமை கடந்த 1956 ஆம் ஆண்டு தோன்றியது வரை தமிழர்கள், கல்வி மற்றும் அது சார்ந்த அரச கருமங்களை நம்பியே காலம் தள்ளி வந்தனர். அதில் நிச்சயமாக மாதாந்திரம் முதலாம் திகதி கிடைக்கும் வருமானம் முக்கிய அங்கமாக இருந்தது. அன்று வறட்சிப் பகுதியாக இருந்த இன்றைய வடக்கு மாகாண பகுதிகளில் நிரந்தர மாத வருமானம் என்பது, எண்ணிப் பார்க்க முடியாத விடயம். அதனை ஒட்டியே அடுத்தடுத்த தமிழர் தலைமுறைகள் கல்வி கற்க முடிந்தது, அரச பணிகளில் அமர முடிந்தது.

இதற்கு, அமெரிக்காவைச் சேர்ந்த சில கிறிஸ்தவ போதகர்களும் அவர்கள் சார்ந்த அமைப்புகளும் கூட துணை செய்தன. அவர்களை பொறுத்தவரையில் நாட்டையே இரண்டாகப் பிரித்து, தெற்கே ஐரோப்பிய போதகர்கள் என்றால் வடக் கில், தமிழர் பகுதிகளில், அமெரிக்கர்கள் என்ற நிலை உருவாகியது.

இந்த காலகட்டத்தில், குறிப்பாக வடக்கு பகுதிகளில் வாழ்ந்த தமிழர், அதிலும் இந்து மதம் சார்ந்த பெரியவர்களும் அமைப்புகளும் கூட மதம் சார்ந்த கல்விக்கு அப்பால் சென்று, அன்றாட தேவைக்கான கல்வி அறிவை வளர்ப்பதற்கான பாடசாலைகளைத் திறந்தனர். ஆறுமுக நாவலர் போன்றோரின் கடல் கடந்த பெருமை இதனையும் குறிக்கும். ஆனால், இன்று, அவசியக் கல்வியைப் பள்ளிகளுக்கு விட்டுவிட்டு, தமிழர் வாழும் வெளிநாடு களில், இந்து மதம் குறித்த அறிவு, அங்குள்ள கோவில்களில், சனி - ஞாயிறு போன்ற நாள்களில் மட்டுமே போதிக்கும் நிலை தோன்றி இருக்காது.

ஆனால், பள்ளிக் கல்வி, அதனை தொடர்ந்து அரச பணி என்பது, ஒரு வித சமுதாய அங்கீகாரமாகவும் பார்க்கப்பட்டது. 'கோழி பிடிக்குற வேலையா இருந்தாலும், கொவர்ண்மென்ட்டு வேலையாத்தான் இருக்கோணும்' என்ற எண்ணம் தமிழர் மத்தியில் வெகுவாக நிலவி வந்தது. அரசு பணி இருந்தால், திருமணத்திற்கு பெண் கிடைப்பது நிச்சயம் என்ற நிலை உருவாகியது. அது போன்றே, அரசு வேலை இல்லை என்றால், அவன் எதற்கும் உருப்படாதவன் என்ற மனப்பான்மையும் தோன்றி, வளர்ந்தது.

ஆனால், இந்த நிலைமை வடக்கு வாழ் தமிழர் மத்தியில்தான் இருந்தது என்று கருத வேண்டும். கிழக்கு தமிழர்களிடமும் இந்த எண்ணம் இருந்தது. ஆனால், அவர்களால், வடக்கு சகோதரர்கள் போல் அடித்து சொல்ல முடியவில்லை. இன்னும் சொல்லப்போனால், யாழ்ப்பாண தமிழர்களுக்கு மட்டுமே இந்த அனைத்துச் சிறப்புகளும் பொருந்தும். வன்னி மற்றும் கிளிநொச்சித் தமிழர்களுக்கு அல்ல.




கிழக்கு வாழ் தமிழர்கள், தங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் கருதி, அவர்களை வடக்கில் உள்ள பாடசாலைகளில் சேர்க்க வேண்டிய கட்டாயம் உருவாகியது. இது, கிழக்கில் வாழ்ந்த வசதி படைத்த தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு மட்டுமே சாத்தியமாகியது. கடந்த 1971 ஆம் ஆண்டு தரவரிசைப்படுத்தல், பின்னர் கிழக்கில் ஒரு பல்கலைக்கழகம் தோற்றுவித்தல் போன்ற அரச முடிவுகளே கல்வி மற்றும் வேலைவாய்ப்பு ஆகிய துறைகளில், கிழக்கில் பாரிய முன்னேற்றங்களை கொண்டு வந்தன.

### திருமண பந்தம்

அது எவ்வாறாயினும், கடந்த ஐம்பது வருடங்களுக்கு முன்னர் வரை, தெற்கின் கடை பகுதியிலும் கூட சிறிய - பெரிய அரச பதவிகளில் தமிழர்களே பணியில் இருந்தனர். அவர்கள் அனைவருமே சிங்கள மொழியைப் பேசவும், படிக்கவும், எழுதவும், நடைமுறையில் பயின்றிருந்தார்கள். அவர்களின் குடும்பங்கள் அவர்கள் பணி செய்யும் இடத்திற்கு பயணம் செய்து, அவர்களுடனேயே தங்க வேண்டிய சூழ்நிலை இருந்திருந்தால், அவர்களுடைய குழந்தைகள் சிங்கள மொழிப்



பள்ளிகூடங்களில் கல்வி கற்பதும் சில சமயங்களில் தவிர்க்க முடியாததாகி இருந்தது.

இவர்களில் பலரும் பின்னர் தலைநகர் கொழும்பில் குடி புகுந்து, அங்கு சிங்கள மொழியில் கதைத்து, அவர்களுடன் கலந்தே செயலாற்றினர். இந்த உறவு, 1983 ஆம் ஆண்டு தமிழர் படுகொலைக்குப் பின்னர் இல்லாததாகி விட்டது. இடைப்பட்ட காலத்தில், தமிழர் - சிங்களவர் இடையே திருமண பந்தங்களும் தோன்றியிருந்தன. அது போன்றே, வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்களில் பேக்கரி போன்ற தொழில்களில் ஈடுபட்ட சிங்களவர்களுடன் உள்ளூர்த் தமிழர்கள் உறவாடி, அவற்றிலும் சில திருமணத்தில் முடிந்திருந்தன. அதற்கான சான்றுகள் இன்றும் தமிழர் மத்தியில் உள்ளன.

அதற்குப் பிந்தைய காலத்தில்தான் இரு இனத்தவர்களும் அடுத்தவரை எதிரியாகவே பார்க்கத் துவங்கினர். அவர்களுடைய மொழியையும் கீழ்த்தரமாக நினைக்கத் துவங்கினர். இதில் தமிழர் தரப்பு, முன்பு தென் மாவட்டங்களில் பணி செய்த காலம் தொட்டே, சிங்கள மக்களை மட்டம் தட்டியே பேசியும் நினைத்தும் வந்தார்கள் என்பதும் உண்மை. இந்தப் போக்கு தமிழ் சமுதாயத்தின் பொதுவான, அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட எண்ணவோட்டமாக, பூதாகாரமாக உருப்பெற்றது. இதற்கு, அன்றைய இங்கிலாந்து ஆட்சியாளர்களின் ஆதரவு இருந்ததோ இல்லையோ, அவர்களின் எதிர்ப்போ, மாறிய வழிநடத்தல்களோ இருக்கவில்லை.

அந்த வகையில், சுதந்திரத்திற்கு பிந்தைய காலத்தில், அரசியல் மற்றும் அரச பணிகளில், சிங்களவர்கள் கை ஓங்கிய பின்னர், அவர்கள் தமிழர்களை, இன ரீதியாகவும், மொழி ரீதியாகவும், தொழில் ரீதியாகவும் திருப்பி அடிக்கத் தொடங்கினார்கள் என்றே எண்ணத் தோன்றுகிறது. வினை விதைத்தவன் வினை அறுத்தான். ஆனால், இடைப்பட்ட காலத்தில், இன ரீதியான வன்முறை தாக்குதல்களே தமிழர்களுக்கு அரசியல் ரீதியாக உலகளவில் இன்னமும் கைகொடுத்து வருகிறது. இதில் 1957, 1983 போன்ற, வருடங்களால் குறிக்கப்படும் நிகழ்வுகளின் போது வேண்டுமென்றே தமிழர்கள் மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது.

இதில் சிங்கள தேர்தல் அரசியலும் இரண்டற கலந்திருந்ததால், ஆட்சியாளர்களும் சரி, அவர்கள் கீழ் பணி செய்த காவல்துறையினரும் சரி, அந்த வன்முறை நிகழ்வுகளில் பங்கு பெற்றார்கள். அவர்களில் சிலராவது, தங்களது இளமை காலத்தில், தங்கள் தங்கள் பகுதிகளில் பணியாற்றிய தமிழ் அரச அதிகாரிகளிடம் இனம் மற்றும் மொழி சார்ந்த அவமானத்தை சந்தித்தவர்களாகக் கூட இருந்திருக்கலாம் என்றும் எண்ணத் தோன்றுகிறது.



(08ஆம் பக்கம் பார்க்க)

# எரிபொருள் பிரச்சினைக்கு தீர்வுகாணாவிடில் மோதல் ஏற்படுவதைத் தவிர்க்கவே முடியாது!

## கெமுனு விஜேரத்ன எச்சரிக்கை




தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு தேவையான எரிபொருளை வழங்குவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இலங்கை போக்குவரத்து சபை டிப்போக்கள் ஊடாக வழங்குவதாகத் தெரிவித்த எரிபொருளையும் சேர்த்து அரச போக்குவரத்து பஸ்களுக்கு விநியோகிக்கப்படுகின்றது. இது இரு தரப்பினரிடையே பாரிய மோதல் நிலைக்கு செல்லும் அபாயம் இருக்கின்றது என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்களின் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார். அத் துடன் கடந்த புதன்கிழமை பயணிகள் போக்குவரத்து சேவை நூற்றுக்கு 80 வீதம் இடம்பெறவில்லை எனவும் குறிப்பிட்டார்.

எரிபொருள் இல்லாமை காரணமாக மட்டுப்படுத்தப்பட்டிருக்கும் பயணிகள் போக்குவரத்து சேவை தொடர்பாக குறிப்பிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

நாட்டில் ஏற்பட்டிருக்கும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகப் பொதுப் போக்குவரத்து சேவை பாரிய பிரச்சினைக்கு முகம்கொடுத்து வருகின்றது.

சில வீதிகளில் வழமையாக 20முதல் 25 தனியார் பஸ்கள் பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடுகின்றபோதும் கடந்த புதன்கிழமை 2 பஸ்களே சேவையில் ஈடுபட்டிருந்தன.

அதேபோன்று கிராமப்புறங்களில் பயணிகள் பஸ் சேவை முற்றாக நிறுத்தப்பட்டிருக்கின்றது. ஏனெனில் அந்தப் பிரதேசங்களில் எரிபொருள் முற்றாக இல்லாமல் இருக்கின்றது.

பொதுவாக புதன்கிழமை 80 வீதமான பஸ்கள் சேவையில் ஈடுபடவில்லை. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண நாங்கள் கலந்துரையாடிய எந்த விடயமும் செயலுறுப்பெறவில்லை. இது பாரிய பிரச்சினையாகும்.

அத்துடன் இலங்கை போக்குவரத்துக்குச் சொந்தமான பஸ்கள் மாத்திரம், எமக்கு வழங்குவதாக தெரிவித்த எரிபொருளையும் பெற்றுக்கொண்டு போக்குவரத்து சேவையில் ஈடுபட்டு வருகின்றன.

இதனால் தனியார் பஸ் உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்கள் விரக்தியுடன் இருக்கின்றனர். இதன் காரணமாக ஒருசில பிரதேசங்களில் தகராறுகள் ஏற்படும் நிலை இருந்தபோது அதனை நாங்கள் சமாதானப்படுத்தினோம்.

அதனால் எமது பஸ் சங்க ஊழியர்கள் இலங்கை போக்குவரத்து பஸ் டிப்போவுக்கு சென்று எரிபொருளை நிரப்பிக்கொள்ளத் தயாராக இருக்கின்றனர்.

அதனால் டிப்போக்களில் தனியார் பஸ்களுக்கு எரிபொருள் நிரப்ப நடவடிக்கை எடுக்கவேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம்.

அத்துடன் விரைவாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். இல்லாவிட்டால் மோதல் ஒன்று ஏற்படுவதைத் தடுக்க முடியாமல் போகும்.

மக்களுக்கு எரிபொருள் இல்லை என்றால் பயணங்களை மேற்கொள்ள பொதுப் போக்குவரத்து சேவை அத்தியாவசியமாகும் என்பதை அரசாங்கம் உணர்ந்துகொள்ள வேண்டும். எரிபொருள் விடயத்தில் பாரிய முறைகேடுகள் இடம்பெற்று வருகின்றன.

600 ரூபாவுக்கு டீசல் தேவையானளவு இருக்கின்றது.எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு சென்று தங்களின் வாகனங்களுக்கு எரிபொருளை நிரப்பிக் கொண்டு வந்து, பின்னர் அதனை வெளியில் எடுத்து களஞ்சியப்படுத்தி வருகின்றனர். இதுதொடர்பில் அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுப்பதாகத் தெரியவில்லை. எனவே அரசாங்கம் பொதுப்போக்குவரத்தை உறுதிப்படுத்த உடனடியாக முறையான வேலைத்திட்டத்தை அமைக்கவேண்டும். போக்குவரத்து அமைச்சு அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுவரை அது தொடர்பில் எந்த வேலைத்திட்டத்தையும் தயாரிக்கவில்லை.

ஒன்றாக இருந்து கலந்துரையாடவும் இல்லை. அதனால் பொதுப்போக்குவரத்து சேவையை முன்கொண்டுசெல்ல அனைவரும் ஒன்றாக இருந்து, தீர்மானம் மேற்கொள்வோம். இல்லாவிட்டால் ஒருபோதும் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது. நிலைமை இவ்வாறு தொடர்ந்தால் பாரிய மோதலிலேயே இது முடிவடையும் என்பதை அரசாங்கத்துக்கு தெரிவித்துக் கொள்கின்றோம். – என்றார்.

---

# கோழி பிடிக்குற வேலையா .....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

### பழங்கதை, ஆனால்..

இவை எல்லாம் பழங்கதை, ஆனால் இதனுள் சில உண்மைகள் புதைந்துள்ளன. அந்த உண்மைகள் கசக்கும். அதிலும் குறிப்பாகத் தமிழர் அரசியல் தலைமைகளுக்கு. அவர்கள் விட்ட பிழைகளால், தமிழர் தரப்பு எதிர்காலம் சூன்யமாகி, பிறந்த நாட்டிலேயே, அகதிகள் போல வாழ வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டமைக்கு தமிழர் தலைமைகளின் தொலை நோக்குப் பார்வை இல்லாமையே முக்கிய காரணம். அதற்கு அன்று முதல் இன்று வரையிலான தமிழர் தலைமைகள் பொறுப்பு ஏற்க வேண்டும். பொறுப்புக் கூற வேண்டும்.

எப்பொழுது, நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்ததோ, அப்போதே, பெருவாரியானவர்களின் ஆட்சியே அமுல்படுத்தப்படும் என் ஜனநாயக உண்மையை அன்றைய தமிழர் தலைமைகளில் சிலராவது ஏற்றுக் கொள்ளவில்லை. அதிலும் குறிப்பாக, நாடு சுதந்திரம் அடைவதற்கு பதினேழு வருடங்களுக்கு முன்னரே, வாக்குச் சீட்டு முறையிலான தேர்தல் ஜனநாயகம், 1931 ஆம் ஆண்டே, நாட்டை வந்தடைந்திருந்தது.

அந்தக் காலத்திய, கற்றறிந்த தமிழ்ப் பெரியோர் யாருமே, தாங்கள் உயர் கல்வி கற்ற இங்கிலாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளின் ஜனநாயக நிதர்சனத்தைப் புரிந்து கொள்ளவில்லை. புரிந்து கொண்டாலும் அதனை இங்கு செயல்படுத்த முயலவில்லை. மாறாக, உள்நாட்டில், உணர்ச்சி பூர்வ அரசியலை அரங்கேற்றி, அதில் வெற்றியும் கண்டனர்.

அதன் விளைவு, பேரினவாத அரசியல் செய்தோர் ஆட்சியில் அமர்ந்த 1956 ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட 'சிங்களம் மட்டும்' என்ற அரச கொள்கையை, தமிழர் தரப்பு வலுவாக எதிர்த்தனர். எதிர்க்க மட்டுமே செய்தனர். அதனைத் தடுத்து நிறுத்த வேண்டிய நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை தங்களிடம் இல்லை என்பதை உணர்ந்து கொண்டும், அவர்கள் இவ்வாறான எதிர்மறை அரசியல் செய்தனர். அதை ஒட்டிப் பிற நடைமுறைச் சாத்தியமான எந்த முயற்சிகளையும் அவர்கள் முன்னெடுக்கவில்லை என்பதே அப்பட்டமான உண்மை.

இன்னும் சொல்லப்போனால், எவ்வாறு, நாடு சுதந்திரம் அடைந்த காலகட்டத்திலேயே, மலையக தமிழர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டனவோ, அப்போதே, வடக்கு - கிழக்குத் தமிழர் தரப்பு சுதாகரித்துக் கொண்டிருக்க வேண்டும். மாறாக, அன்றைய சிங்கள ஆட்சியாளர்க ளுக்கு 'ஜால்ரா' அடித்து, நாட்டின் சிறுபான்மையினர் இன அரசியலில் தங்களை மட்டுமே முன்னிலைப்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பாக மட்டுமே அவர்கள், அதனைக் கண்டார்கள். மகிழ்ந்தார்கள்.

### பிற மொழிப் புலமை

சிங்களம் மட்டுமே என்ற சட்டம் முன்னெடுக்கப்பட்டு 55 ஆண்டுகள் கடந்த பின்னராவது பின்னோக்கிப் பார்ப்பது, தமிழர் தரப்பிற்கு பயனுள்ளதாக இருக்கும். அன்று சிங்களத்தை மற்றொரு மொழியாக மட்டுமே பார்த்து, அந்த மொழியைப் படித்து தேர்ந்திருந்தால், இன்றும் கூட, பல்வேறு தரப்பட்ட அரச பணிகளில் தமிழர்கள் தொடர்ந்து கோலோச்சி வந்திருப்பார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது. அது சமூக, அரசியல் ரீதியாக ஏற்புடையதா என்பது சமகால அளவு கோல்களை வைத்துக் கணக்கிலடப்பட வேண்டிய விவகாரம் என்பது தனி விடயம்.

ஆனால், 'சிங்களத்தைப் படிக்க மாட்டோம' என்று மார்தட்டி, அந்த மொழியையும், அந்த மொழி படித்தவர்களையும் மட்டம் தட்டி, தமிழர்கள் சாதித்தது என்ன? பிற மொழியைக் கற்பது தான் பிரச்சினையாக இருந்திருந்தால், 1957 காலி முகத்திடலில் தமிழர் மீது அடக்குமுறை கட்டவிழ்த்துவிடப்பட்ட காலம் தொட்டு, அவர்களில் பலரும் பல்வேறு ஐரோப்பிய நாடுகளுக்கு குடி பெயர்ந்துள்ளார்கள், அங்கு பேசும் பல்வேறு மொழிகளையும் கற்று தேர்வதில் அவர்களுக்கு பிரச்சினை எதுவும் இருக்கவில்லை. அங்கெல்லாம், இரண்டாவது, மூன்றாவது தர மக்களாக வாழ்வதில் அவர்களுக்கு எந்த விதப் பிரச்சினையும் இருப்பதில்லை.

அது போன்றே, அந்த நாடுகளில் எல்லாம் அகதிகளாக செல்வதிலும், அங்கு அரசியல் புகலிடம் கோருவதையும் கூட பல இலங்கைத் தமிழர்கள் பெருமையாகக் கருதி வந்திருக்கிறார்கள். இனப்போர் முடிந்த பின்னர், அவ்வாறு மேலை நாடுகளில் அகதிகளாக ஏற்றுக் கொள்ளப்படுவதற்கும், அங்கு புகலிடம் கோரி பின்னர் நிரந்தர பிரஜை ஆவதும், அதற்காக அவர்கள் ஆடும் ஆட்டமும் தோற்றது போங்கள்.

### மூக்கை நுழைப்பவர்கள்

இதில், இரட்டைக் குடியுரிமை உள்ள நாடுகளில் இருப்பவர்கள், தங்களது இலங்கைக் குடியுரிமையை காரணம் காட்டி, இங்கு தமிழர் அரசியலில் வெளியில் இருந்தவாறே, தொடர்ந்து மூக்கை நுழைக்கின்றனர். அந்த நாடுகளில் எல்லாம், இரட்டைக் குடியுரிமையை இல்லாது ஆக்கினால், அவர்கள் தங்களது இலங்கைக் குடியுரிமையைத் தக்க வைத்துக் கொள்வார்களா, என்ன? அல்லது, அந்த மேலை நாட்டு குடியுரிமையை மட்டுமே காப்பாற்றிக் கொள்வார்களா?

அது போன்றே, இலங்கை அரசே, இரட்டைக் குடியுரிமை சட்டத்தை இல்லாதாக்கினாலும், அவர்களது சாயம் வெளுத்து விடும். என்ன, ராஜபக்ஷ சகோதரர்கள் ஆட்சியில் தொடரும் வரை, அவர்களில் ஒருவராவது இரட்டை பிரஜா உரிமையின் பயன்களை தொடர்ந்து அனுபவித்து வரும் வரை, அவ்வாறு நடக்காது என்று திண்ணமாக நம்பி இருந்திருக்கலாம். ஆனால், இப்போது, ஜனாதிபதி பதவிக்காக கோட்டபாய ராஜபக்ஷ தனது அமெரிக்கக் குடியுரிமையை விட்டதும், அவ்வாறு செய்ய விரும்பாததால், பஸில் ராஜபக்ஷ, தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறக்க வேண்டியமையும் அண்மைக் கால நிகழ்வுகள்.

இதன் விளைவுதான், என்ன? கடந்த பத்தாண்டுகளாக, இங்கு வாழும் தமிழ் இளைஞர்களின் மனதில் இலங்கையில் அவர்களுக்கு எதிர்காலமே இல்லை என்ற எண்ணம் உருவாகி உள்ளது. அவர்களில் பலரின் உறவினர்கள் வெளிநாடுகளில் வாழ்வதால், அங்கிருந்து வரும் அழைப்பிற்காக அவர்கள் காத்திருக்கத் துவங்கி, கன காலம் ஆகி விட்டது. அவ்வப்போது. அவர்களது நண்பர்களில் ஒரு சிலராவது இவ்வாறு வெளிநாடு செல்லும் போது, அவர்களின் ஆசையும் நம்பிக்கையும் மீண்டும் மீண்டும் துளிர் விட்டு, அலை மோதுவதும் எதிர்பார்க்கப்பட வேண்டிய ஒரு விடயமே.

இதுவும் சரி, இதற்கு அப்பாலும் சென்று, கள்ளத் தோணிகளில் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்குச் சென்று அங்கு 'பொருளாதார அகதிகளாக' அதற்கான சிறையில் அடைபடுவதும் அவர்களுக்கு வழக்கமாகி விட்டது. இதற்கு வெட்கப்படாமல், அதனைப் பெருமையாக நினைப்பவர்களும் உள்ளனர். அவர்கள் அறிந்து கொள்ள வேண்டிய விடயம் ஒன்றுள்ளது.

இனப்போர் முடிந்த காலம் துவங்கி, மேலை நாடுகள் அனைத்துமே அங்கு தஞ்சம் புகுந்துள்ள இலங்கைத் தமிழர்களை வெளியேற்றுவதிலேயே கரிசனமாக உள்ளனர். இன்னும் சொல்லப் போனால், அண்டை நாடான இந்தியாவில் தஞ்சம் புகுந்து இன்னமும் அங்கு தங்கி வரும் சுமார் ஒரு லட்சம் தமிழ் அகதிகளை, இலங்கைக்குத் திருப்பி அனுப்பி, ஓர் இணக்க சூழலைத் தங்களுக்கு புது டெல்லி ஏற்படுத்தித் தர வேண்டும் என்று குறிப்பாக ஐரோப்பிய நாடுகள் கடந்த பத்தாண்டுகளாகவே எதிர்பார்த்து வருகிறார்கள். ஆனால், இந்தியாவும் சரி, தமிழ் நாடும் சரி, எந்த விதத்திலும் இதில் அதீத ஆர்வம் காட்டவில்லை.

மாறாக, அவர்கள் விரும்பினாலும், இலங்கைக்குத் திரும்பிச் சென்றால், அங்கு உடல், பொருள் மற்றும் உளவியல் ரீதியாகப் பாதுகாப்பாக இருப்பார்கள் என்ற நம்பிக்கை இருந்தால் மட்டுமே, இந்தியா, இந்த அகதிகளை நாடு திரும்ப அனுமதிக்கும். அது போன்றே, அவர்களது பொருளாதார முன்னேற்றத்திற்கான உள் கட்டமைப்பு வசதிகள் இங்கு இருந்தால் மட்டுமே, இந்தியாவும், தமிழ் நாடும் அவர்களுக்குப் பிரியாவிடை அளிக்கும் என்ற கருத்து நிலை பேணப்படுகின்றது.

இவ்வாறான சூழலில், எதிர்வரும் காலங்களில், மேலை நாடுகளுக்குச் சென்று, அங்கு வாழ்க்கையில் முன்னேறலாம் என்று தற்போதைய பொருளாதார சூழலில் தமிழ் இளைஞர்கள் நினைத்தால், அது வெறும் கானல் நீராகவே முடியும் என்பதே உண்மை. என்ன, 'கோழி பிடிக்குற வேலையா இருந்தாலும் கொவர்ண்மென்டடு வேலையாத் தான் இருக்கோணும் என்ற கடந்த நூற்றாண்டின் சொல்லாடல், ஏதாவது ஒரு மேலை நாட்டில், அங்குள்ள அகதிகள் முகாமிற்கு மட்டுமே பொருந்துமோ என்ற கவலையும் உள்ளது. தமிழருக்கு, இது என்ன பெருமையா?

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

செவ்வழி நயனம்

# சமூக விழுமியங்களை மதிப்போம்!

மனிதனுடைய நம்பிக்கைகள் எண்ணங்கள், கருத்துக்கள் என்பவற்றின் உருவாக்கத்தின் அடிப்படையில் அமைந்துள்ளதே விழுமியம் எனப்படுகின்றது. விழுமியங்கள் மனித வாழ்க்கையில் ஒழுங்கமைக்கப்பட்ட கட்டுக்கோப்பான வாழ்க்கை வாழ்வதற்கு வித்திடுகின்றன. அவ்வாறான விழுமியங்களை நேர்மையுடன் பயன்படுத்துவதே அவற்றின் தொடர்ச்சியினை உறுதிப்படுத்துகின்றன. இந்தத் தொடர்ச்சியே விழுமியத்தைத் தொடர்புடைய ஏனைய கருத்துக்களான நம்பிக்கை, கருத்து, எண்ணம் என்பவற்றிலிருந்து வேறுபடுத்தப்படுகின்றது. இத்தகைய சூழலில் விழுமியம் என்பது மனிதன் எதை அடிப்படையாகக் கொண்டு செயற்படுகின்றானோ அதைக் குறிக்கின்றது எனலாம்.



சமூக விழுமியங்களின் முக்கியத்துவம் என்னவென்றால் அவை மனித உறவுகளை வலுப்படுத்துகின்றன. அதனால்தான் மரியாதை, நட்பு, நீதி, சுதந்திரம், அன்பு, நேர்மை, சகிப்புத் தன்மை மற்றும் பிற மதிப்புக்களை நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவை சிறந்த எதிர்காலத்தைத் தேடும் நோக்கோடு விளங்குகின்றன. சமூக விழுமியங்கள் ஆழ்நிலை என்று கருதப்படுகின்றன. ஏனெனில் அவை சிறந்த வாழ்க்கை நிலைமைகளை அடைவதற்காக மக்களின் தனிப்பட்ட அல்லது சமூக நடவடிக்கைகளில் தலையிடுகின்றன. எந்தவொரு சமூக மதிப்பும் சுயாதீனமாகச் செயற்படாது. ஏனென்றால் அவை ஒன்றாக மதிப்புக்களின் சங்கிலியை உருவாக்குகின்றன. அவை மீண்டும் மீண்டும் செயற்படும் போது நேர்மறையான முடிவுகளை உருவாக்குகின்றன.

விழுமியங்கள் இருவகையாகக் கருதப்படலாம்.

1. தனிமனித விழுமியங்கள்
2. பண்பாட்டு விழுமியங்கள்

தனி மனித விழுமியங்கள் தனி மனிதனுடைய வாழ்வை நெறிப்படுத்தி ஒழுங்கமைப்பதை நோக்கமாகக் கொண்டவை. இவற்றிற்குள் சமய, புராண, இதிகாசக் கதைகளின் அறநெறிக் கொள்கைகளும் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஒரு சமூகத்தின் பொதுவாக உள்ள விழுமியங்கள் பண்பாட்டு விழுமியங்கள் எனப்படுகின்றன. மனிதர்கள் சேர்ந்து வாழ்வதற்கு எந்த விழுமியங்கள் சிறப்பாகத் தேவைப்படுகின்றனவோ அவை பண்பாட்டு விழுமியங்களாகக் கருத்தில் கொள்ளப்படுகின்றன.

ஒரு சமுதாயத்தில் விழுமியங்கள் கதைகள், பழமொழிகள், சமயம் என்பவற்றின் ஊடாக வெளிப்படுகின்றன. தமிழர் மத்தியில் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், திருக்குறள் போன்ற ஆக்கங்களிலும் தமிழர் சமுதாயத்தில் நிலவும் விழுமியங்களைக் காணலாம். சமூக விழுமியங்களாகக் கருதக்கூடிய பல்வேறு மதிப்புக்கள் உண்மையாக இருப்பினும் முக்கிய சமூக விழுமியங்கள் மற்றும் அவற்றின் எடுத்துக்காட்டுக்கள் என்ன என்பதைத் தெளிவுபடுத்துவது முக்கியம்.

* மரியாதை

மரியாதை என்பது மக்களால் மிகவும் பாராட்டப்பட்ட ஒரு மதிப்பு. எல்லாவற்றிற்கும் மேலாக உறவுகளை மதிக்க வேண்டும். எங்களுக்கிடையே உள்ள வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல் அனைத்து தனிநபர்களும் முக்கியமானவர்கள் என்பதை அங்கீகரிப்பதற்கான ஒரு வழியாகும். எடுத்துக்காட்டாக ஒரு கூட்டாளியின் கருத்தைக் கவனமாகக் கேட்பது கூட மரியாதைக்கு ஒத்ததாகும்.

* நீதி

நீதியை நடைமுறைக்குக் கொண்டு வருவது கடிமான பணியாகும். குறிப்பாகச் சமுதாயத்தில் தனிநபர்கள் உரிமைகள் மற்றும் கடமைகளை ஒரு சீரான வழியில் மதிப்பது மற்றும் பாதுகாப்பது பற்றியது என்பதனால் நீதியானது கடினமான பணியாகக் கொள்ளப்படுகின்றது. எடுத்துக்காட்டாக மறைக்கப்பட்ட இயந்திர சிக்கல் கொண்ட வாகனத்தை விற்பனை செய்வதன் மூலம் ஒருவர் மற்றொருவரை ஏமாற்றும் போது சேதத்தை ஏற்படுத்துவதற்கும் வாங்குபவரை ஏமாற்றுவதற்கும் சட்டத்தால் நிறுவப்பட்ட நபருக்கு அபராதம் விதிக்க வேண்டும்.

* காதல்

ஒரு தனிநபராக உங்களை நேசிப்பதும் நம்மை சுற்றியிருப்போரை நேசிப்பதும் மகிழ்ச்சியையும் ஆறுதலையும் உருவாக்கும் ஒரு மதிப்பு. அன்பு செய்வதன் மூலம் மற்றவர்களை மதிக்க வேண்டும். அவர்களின் சிந்தனையை மதிப்பதும் செயல் சுதந்திரத்தை அங்கீகரிப்பதும் பதிலுக்கு எதையும் கேட்காமல் ஆதரவளிப்பதும் இதில் அடங்கும்.

உதாரணமாக அன்பான ஒருவரை அவர் இருப்பதைப் போலவும் இருவருக்குமிடையேயான வேறுபாடுகளுக்கும் அப்பாற்பட்டதாகவும் நாம் ஏற்றுக் கொள்வது அன்புதான்.

* சகிப்புத் தன்மை

சகிப்புத் தன்மை என்பது நாம் அனைவரும் பலங்களும், பலவீனங்களம் கொண்ட தனித்துவமான மனிதர்கள் என்பதைக் குறிக்கின்றது. எனவே வேறுபாடுகள் எப்போதும் இருக்கும் மற்றும் முக்கியமான விடயம் அவற்றை அங்கீகரித்து எவ்வாறு மதிக்க வேண்டும் என்பதை அறிவதாகும்.

இவ்வாறாக ஒரு தனிமனித வாழ்வில் சமூக விழுமியங்கள் செல்வாக்குச் செலுத்துவதை அவதானிக்கலாம். மனிதனானவன் சமூகத்துடன் எவ்வாறு நற்பிரசையாக ஒன்றிணைந்து வாழ வேண்டும் என்பதனையும் மற்றவர்களுக்கு உதவி செய்து அதனூடாகத் தன் வாழ்க்கையை எவ்வாறு முன்னேற்றுவது என்பது பற்றியும் அறிந்து கொள்வதற்கு இவ் விழுமியங்களே அடிப்படைக் காரணிகளாக விளங்குகின்றன. மனித வாழ்வு சிறப்பானதாகும்.அதனைச் சிறந்த செயற்பாடுகளால் பூரணப்படுத்துவதே எம் வாழ்க்கைக்கு நாம் கொடுக்கும் சிறந்த மரியாதையாகும்.

- சபாரத்தினம் கஜந்தன் -
(சமுதாய சீர்திருத்த அபிவிருத்தி உத்தியோகத்தர்,
சங்கானைபிரதேச செயலகம்)

## நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக்கூடல்
## கட்டுரைப்போட்டி - 2022

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக்கூடல் அமைப்பினால் நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த திருவிழாவினை முன்னிட்டு எதிர்வரும் 2022.06.24 ஆம் திகதி சைவம், தமிழ், பண்பாட்டு கலாசார விழுமியங்கள் தொடர்பான பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1. இப்போட்டியானது யாழ்ப்பாண கல்வி வலயப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களிடையே நடைபெறும்.

2. பிரிவுகள் – தரம் 6,7,8 – கனிஷ்ட பிரிவு – 100 சொற்கள்
தரம் 9,10,11 – மத்திய பிரிவு – 150 சொற்கள்
தரம் 12,13 – மேற்பிரிவு – 200 சொற்கள்

3. கட்டுரைத் தலைப்புக்கள் சமய பண்பாட்டு விழுமியங்கள், மனித வாழ்வின் நெறிமுறைகள், மாணவர்கள் வளர்க்கவேண்டிய திறமைகள், பண்புகள் மற்றும் நல்லூரானின் பெருங்கருணை சார்ந்து அமையப்பெறும்.

மாணவர்களின் கட்டுரைக்கான தலையங்கங்கள் போட்டிக்கு முதல் நாள் மதியத்தின் பின்னர் உரிய பாடசாலை அதிபர்கள் ஊடாக வழங்கப்படும்.

4. பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி நிறுவன மாணவர்கள் பங்குபற்றும் திறந்த பிரிவு போட்டிகள் 250 சொற்களை கொண்டதாக அமையும். திறந்த பிரிவில் பங்குகொள்ள விரும்புபவர்கள் 22.06.2022 ஆம் திகதி புதன்கிழமை மாலை 03 மணிக்கு முன்னதாக sevvalinayanamgmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு தங்களது பதிவை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம். மேலும் திறந்த பிரிவில் பங்குபற்றும் மாணவர்கள் தமது மாணவர் பதிவை உறுதிப்படுத்திக்கொண்டு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

5. போட்டி 24.06.2022 ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 09 மணிக்கு பாடசாலைகளிலும், திறந்த பிரிவுக்கு 24.06.2022 ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 09 மணிக்கு யா/ நல்லூர் மங்கயற்கரசி வித்தியாலயத்திலும் நடைபெறும்.

6. ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்கள் பெறுவோருக்கு பெறுமதியான பரிசில்களும் அடுத்த ஏழு இடங்களைப் பெறுவோருக்கு கௌரவ பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

7. யாழ்ப்பாணம் நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே சமயம் சார்ந்த நிறந்தீட்டல் போட்டி 2022.06.26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 09 மணிக்கு அறநெறிப் பாடசாலைகளிலேயே நடைபெறும்.

## விபரீதகரணிக்கிரியா

**செய்முறை**




படி 1.கைகளை தலைக்கு மேலாக நீட்டியவாறு மல்லாந்து படுக்கவும். கால்கள் இரண்டும் இணைந்திருக்கட்டும். கைகள் இரண்டும் காதுகளுடன் அணைத்தவாறு இணைந்திருக்கட்டும்.

படி 2.பின் கைகளை பக்கவாட்டில் வைத்தவாறு முழங்காலை மடக்காது சுவாசத்தை இழுத்தபடிகால்களை 90 பாகை அளவுக்கு உயர்த்தவும். சுவாசத்தை வெளிவிட்டவாறு கால்களை தலைக்கு பின்நோக்கி கொண்டுவரவும்.

படி 3. புட்டத்தை உயர்த்தி உள்ளங்கைகளை இடுப்புக்கு ஆதாரமாக வைத்து, உடலைக் கை மூட்டுக்கள் தாங்குமாறு முழங்கைகள் தரையில் ஊன்றியவாறு இருக்கவும். அதாவது இடுப்புப் பகுதியை, உடலை 45 பாகையில் வைத்துக் கொண்டு கால்களை 90 பாகை அளவுக்கு உயர்த்த வேண்டும். 1 நிமிடம் வரையில் இயல்பான சுவாசம் கொள்க. இது சர்வாங்காசனத்தின் அரைநிலையைக் குறிக்கும்.

படி 4. மெதுவாக மூச்சை வெளிவிட்டவாறு ஆரம்ப நிலைக்கு வந்து உடலைத் தளர்த்திக் கொள்ளவும்.

**பலன்கள்**

அடி வயிற்றுப் பகுதி உள்ளுறுப்புக்களுக்கு நல்லது. இரத்தோட்டம் சீராக இடம் பெறும். இரத்தம் சுத்திகரிக்கப்படுகிறது. சுவாசப்பை, இருதயத் தசைகள் பலம் பெறும். சுவாசம், இருதயத்துடிப்பு, இரத்தோட்டம் சீராக நடைபெறும். தலைப்பகுதிக்கு அதிக இரத்தம் கிடைக்கிறது. மேலும் மூக்கடைப்பு, பீனிசவாசம், மார்புச் சளி, இருமல், என்புருக்கி நோய், நரம்புத்தளர்ச்சி, அஸ்மா,குடலிறக்கம், குடல்வளரி, நீரிழிவு போன்ற பல உபாதைகள் நீங்கும். குடல், வாயுக்கோளாறு, முதுகுவலி, கால் பலவீனம், கால்விறைப்புத்தன்மை, மூட்டுவலி, கீல்வாதம் நீங்கும். பெண்களுக்கு கருப்பை, சூலகம்மாதவிடாய் சம்பந்தமான கோளாறுகள் நீங்கும்.

- ஸ்ரீ. நதிபரன் - (யோகா போதனாசிரியர், நல்லூர் திவ்ய ஜீவன சங்கம்)


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# தமிழ் மக்கள் எங்கு நிற்கிறார்கள்?



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் -36**

இந்திய ஒப்பந்தத்துக்கு சிங்களப் பெரும்பான்மையின் விருப்பமின்மையையும் எதிர்ப்பையும் கணித்த சம்பந்தன், அதனால் அவர்களோடு இணைந்து சமஷ்டிக்கு ஈடான ஓர் அரசமைப்பைப் பெற்று விடலாம் என முயன்று கொண்டிருக்கிறார்.

நாட்டின் இரண்டு தலைவர்களுக்கு அவர்களின் வாழ்வின் இலட்சியம் ஒன்று உள்ளது.

ஒருவர் – பல காலமாக பல்வேறு அரசாங்கங்களின் அமைச்சராக இருக்கும் பேராசிரியர் ஜி.எல். பிரிஸ். சந்திரிகா அரசிலும் அரசமைப்பு உருவாக்க விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சராக இருந்தார். பின்னர் ரணிலின் அரசிலும் இருந்தார். மஹிந்தவின் அரசிலும் இருந்தார். இப்போது கோட்டாவின் அரசிலும் இருக்கிறார். விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடந்த காலங்களில் கூட இந்திய ஒப்பந்தத்தை மோவியோ, தவிர்த்தோ புதிய அரசமைப்பு ஒன்றை ஏற்படுத்தும் முயற்சியில் அவர் சம்பந்தப்பட்டார். அதை விரும்பினார்.

அடுத்தவர் – தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன். தான் சார்ந்த அரசியல்கட்சியின் அடிப்படை நிலைகளோடு அவர் தமது அரசியலை நடத்திக் கொண்டு சென்றாலும், அவர் தனிப்பட்ட ரீதியில் வன்முறையையோ பிரிவினையையோ பெரும்பாலும் ஆதரிக்கவில்லை. தன்னுடைய வாழ்நாள் காலங்களிலேயே ஸ்ரீலங்கா அரசுடன் இணைந்து புதிய அரசமைப்பு ஒன்றை – தமிழ் மக்களும் ஏற்றுக் கொண்டதாக – செய்து தரவேண்டும் என்ற இலட்சியத்தைத் தீர்வாக இப்பொழுதும் பேசிக் கொண்டிருக்கிறார்.

ஜி.எல்.பீரிஸ், சம்பந்தன் இருவரும் தாங்கள் எல்லா இன மக்களும் பங்கு பற்றி ஏற்றுக்கொண்ட அரசமைப்பை ஸ்ரீலங்காவுக்கு தந்தவர்கள் என்ற பெயருடன் அதன் வரலாற்றில் நிலைக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள் போலும்.

இரண்டு பகுதியினருமே இங்கு புதிய அரசமைப்பு என்ற நோக்கில் பயணிக்கின்றனர். அதில் ஒரு மையப் புள்ளி இருக்கின்றது. இந்தியாவின் ஒப்பந்தத்தின் கீழ் வந்த 13 ஆவது திருத்த மாற்றங்களை விலத்தி, இணக்கத்தில் காணப்படும் அதிகாரப் பரவல் சாரங்களை உள்ளடக்கி, புதிய அரசமைப்பைத் தயாரிப்பது என்பது அவர்கள் உத்தேசம். அந்த மையப் புள்ளியிலிருந்து பார்த்தால் அரசியல் தீர்விலிருந்து அவை இந்தியாவை விலக்கும். அப்படியானதொன்று உள்நாட்டிலேயே விளைந்த தீர்வு (Home grown solution) எனப் பிரேமதாஸா காலத்திலிருந்து பேசப்பட்டதாக அமையும். நோக்கம் ஒன்றானாலும் ராகு, கேது போல் யார் யாரை விழுங்குவது, ஏப்பம் விடுவது என்ற சுழியோடல்கள்தான்.

இந்தக் கரட்டைத் தொங்கவிட்டுத்தான் நல்லாட்சி காலம் முழுவதிலும் ரணில் புதிய அரசமைப்பை உருவாக்குவோம் எனக் கூட்டமைப்பினரை நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு நீண்ட காலம் நடக்க பண்ணினார்.

சாணக்கியத்துடனும் சாமர்த்தியத்துடனும் அரசியல் நகர்வுகளை முன்னெடுத்திருந்தால் ரணிலுக்கு ஆதரவு தந்து, அவரது அரசை நிறுத்தித் தங்கிப் பிடிக்கும் முன்பு அமைச்சரவையின் ஊடாக மாகாண சபை அதிகாரிகள், மாவட்ட அதிகாரிகள், அலுவலர்கள் யாபேரும் ஒரு குறிப்பிட்ட திகதியிலிருந்து மாகாண சபையின் அதிகாரங்களுக்குள் வருவார்கள் என்று நடைமுறை அதிகாரத்தின் தலைவிதியை மாற்றியிருக்கலாம். புதிய அரசமைப்பின் மீதான மோகங்களால் இடையில் நடைமுறைப்படுத்தி இருக்கக் கூடிய எவ்வளவோ யதார்த்தங்களில் தமிழ்ப் பகுதிகள் பெருமளவு தன்னிறைவு நோக்கிப் போயிருக்கலாம். தமிழ் மக்களின் வாழ்வாதாரப் பொருளாதா ரங்கள் பற்றிய சிந்தனைகளோ, திட்டங்களோ இன்றி, அரசியல் தலைவர்கள் அக்கறை காட்டியவை தேர்தல்களும் அவற்றில் ஆசனங்கள் எப்படிப் பெற்றுக்கொள்வதும் என்பதும்தான்.

இந்தியாவுடன் இணங்கி, ஒப்பந்தத்தைப் பலப்படுத்தி, அதனை நடைமுறைப் படுத்துவதா அல்லது ஸ்ரீலங்காவில் தன்னில் மதிப்பு வைத்திருக்கும் அரசியல்வாதிகளோடு சேர்ந்து புதிய அரசமைப்பு ஒன்றின் கீழ் பிரிக்கப்படாத, பிரிக்கப்பட முடியாத, ஒரு நாட்டுக்குள் அதிகாரப் பரவலைப் பெற்றுக் கொள்வதா எனத் தீர்மானிக்க முடியாது சம்பந்தன் இன்று வரை தனது மூப்புற்ற வயதிலும் உழன்று கொண்டிருக்கிறார் என்றே நினைக்கிறேன்.

எழுபது வருடங்களுக்கு மேலாக சிங்களப் பேரினவாதத்துடன் நடத்திய இணக்கப்பாடுகள், பேச்சுவார்த்தைகள், அவற்றில் நடந்தவை எல்லாம் கோப்புகளாக சம்பந்தனிடம் உண்டு. இந்த அனுபவங்களில் சிங்களப் பேரினவாதம் தமிழர்களோடு இணக்கத்துக்கு வருமா என்ற யதார்த்தத்தை அவர் புரிந்து கொள்கிறாரோ தெரியாது. அவரது கட்சியினர் புரிந்து கொள்ள வைக்கிறார்களோ அதுவும் தெரியாது.

கோட்டாபய பெரு வெற்றியுடன் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டு, நாடாளுமன்றிலும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்ததும், அவரது திட்டங்களைக் கணக்கெடுத்து, இந்தியாவின் அனுபவங்கள் மிகுந்த ராஜதந்திரியான அதன் வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தமிழ் அரசியல் தலைவர்கள் யாவரையும் சந்தித்து, வளரும் நிலையைத் தெளிவுபடுத்தி, முதலாவதாக தமிழ் மக்கள் இருப்பவற்றைத் தக்கவைத்துக் கொள்ளப் பார்க்க வேண்டும், அதிலிருந்து முன்னேறுங்கள் என்று புத்திமதி தந்தார்.

பின்னர் கூட்டமைப்பின் சில தரப்புக்கள் 13ஆம் திருத்தத்தை அமுல் நடத்தக் கோரி சமர்ப்பணம் தயாரித்தமையும், அதில் தமிழரசுக் கட்சியினர் தமது நிலைப்பாட்டின் மூலம் மாற்றங்களை ஏற்படுத்தி சமஷ்டி அமைப்பை வலியுறுத்தி, ஓரணியில் மகஜர் கொடுத்தமையும் தமிழ் மக்களின் அரசியல் கட்டங்களில் சுவாரஸ்யங்கள்.

இந்தியா தனது பிராந்திய, சர்வதேச ஆளுமைகளைத் தமிழ் மக்களுக்காகப் பாவித்து ஒரு நியாயமான தீர்வை ஏற்படுத்தித் தந்திருக்கலாம்தானே? அதை விடுத்து ஒவ்வொரு காரணத்தைக் காட்டி இழுத்தடித்துத் தனது கருமங்களை பார்த்துக் கொண்டிருக்கின்றது என்ற குற்றச்சாட்டுக்களும் பலரால் வைக்கப்படுகின்றன. விடுதலைப் புலிகளைக் கட்டுப்படுத்த இந்தியா நடத்திய போர், அதன் பின் புலிகளை அழிப்பதற்கு சர்வதேசத்துடன் இணைந்து மஹிந்த ராஜபக்ஷவுக்குத் தந்த உதவிகள், இவற்றால் தங்களது எதிர்பார்ப்புகள் எல்லாம் வேரறுக்கப்பட்டன என்ற தமிழ் மக்களின் ஆதங்கங்கள் யாவும் மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் நியாயமானவை.

இந்தியாவைப் பொறுத்தளவில் அதன் அணுகுமுறைகளில், அதன் பிராந்தியப் புவியியல் நிலைப்பாடுகளில் அது அங்கம் வகிக்கும் குழும நாடுகளின் பொது கொள்கைகளில், இறைமை சார்ந்த, இந்தியக் கடல் பிராந்தியத்தின் ஆதிக்கம் பற்றிய பல விடயங்கள் இழையோடுகின்றன. அந்தத் தறிகளின் நூலோட்டங்களை விவரிப்பது இந்தத் தொடரின் நோக்கம் அல்ல. அன்றில், அவற்றை நியாயப்படுத்துவதும் எண்ணமல்ல.

சுருக்கமாகத் தற்சமய நிலையை சிலேடையாக சொல்லுவதானால் பாரதியார் தனது கனவுகள் நினைவாக வேண்டும், இந்தியாவின் மொழிவாரி மாகாணங்கள் பரஸ்பரம் பண்டமாற்றுகளில் வலிமை பெற்று நாடு பலமானதாக வேண்டும் என்று பாட்டிசைக்கும் போதே 'சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்' என்று சொன்னார். பாரதி மொழிவாரி அர்த்தத்தில் சிங்களத்தை உள்ளடக்கினார்.

ஆனால் மோடியின் அரசோ நாட்டிற்குப் பாலம் கட்டுகிறது. லும்பினியில் கௌதம புத்தர் பிறந்த பூமியில் விகாரை அமைத்து, அதற்கு அருகாமையில் விமானத் தளமும் ஏற்படுத்தி, பக்தர்கள் வந்து வழிபட்டு போக ஏற்பாடு செய்துள்ளார்கள். பிரத்தியேகமாக ஸ்ரீலங்காவின் பௌத்த குருமாரையும், அரசியல்வாதிகளையும் (ராஜபக்ஷ உட்பட) அணியினரையும் பீஹார் மாநிலத்தின் உல்லாசத்துறையின் மூலம் அழைத்து, கலாசார நட்புறவுப் பாலங்களை ஏற்படுத்துகிறது.

பௌத்தத்தையே உலகிற்குத் தந்தவர்கள் நாங்கள், அதனைப் பரப்புவதில் பெருமை கொள்கிறோம், ஆகவே ஸ்ரீலங்காவின் பௌத்த மத வழிபாடுகளுக்கு நாங்கள் எதிரானவர்கள் அல்லர், கலாசார விழுமியங்களில் ஒன்றானவர்கள், எனவே விரோத மனப்பான்மை தேவையற்றது என்ற கருத்தூக்கங்கள்.

அதேசமயம் இலங்கை – இந்திய ஒப்பந்தம் இரு நாடுகளுக்கிடையே அரசாங்கங்களால் ஏற்படுத்தப்பட்டது. அது காங்கிரஸ் ஆட்சியில் செய்யப்பட்டதானாலும் நாட்டின் கொள்கை என்ற அடிப்படையில் அரசியல் தீர்வுக்காக அதனை மோடி அரசு அமுல் படித்தும் என தமிழ் மக்களுக்கும் சர்வதேசத்துக்கும் இந்தியா கூறுகிறது.

(வளரும்)



